# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 1 வியாழக்கிழமை(16-11-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:287


# கொழும்பு வரும் பிரிட்டிஷ் அமைச்சர் இனப்பிரச்சினை குறித்து ஆராய்வார்!

## கட்சித் தலைவர்களைச் சந்தித்து கருத்துக்களைக் கேட்டு அறிவார்

கொழும்பு,நவம்பர்16

**பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெய்ன் இலங்கை அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று இம்மாதம் 22ஆம் 23ஆம் திகதிகளில் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வருகிறார்.**

**இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் குறித்து ஆராயும் பொருட்டும், கருத்துக்களைக் கேட்டறிந்து நிலைமையை மதிப்பிடும் பொருட்டும் அரசியல் கட்சிகளின் தலைவர்களை அவர் சந்தித்துப் பேசுவார்.**

பொதுநலவாய நாடுகளின் விவகாரம் மற்றும் தென்னாசிய நாடுகள் விவகாரங்களுக்கும் பொறுப்புகளையும் விசேடமாகக் கொண்ட பீற்றர் ஹெய்ன் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்பு வருகிறார்.

பிரிட்டிஷ் - சிறிலங்கா உறவுகளை மேம்படுத்துவது சம்பந்தமாக

(10ஆம் பக்கம் பார்க்க)

### விசாரணை தொடர்கிறது

யாழ்ப்பாணம்,நவ.16

பல்கலைக்கழக கலைப்பீட முதலாம் வருட மாணவி லோகநாதன் ரதிதேவி 'ராகிங்' செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சிரேஷ்ட மாணவிகள் மீதான விசாரணைகளை சிரேஷ்ட மாணவ ஆலோசகர் திருமதி கைலைநாதன் தலைமையில் மாணவ ஆலோசகர்களைக் கொண்ட குழுவினர் நடத்தி வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பத்திரிகைகளில் வெளியான தகவல்களுக்கும் மாணவி பல்கலைக்கழகத்துக்குக் கொடுத்த முறைப்பாடுகளுக்கும் இடையில் முரண்பாடு காணப்படுவதாலேயே மீண்டும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகச் சொல்லப்படுகிறது. (அ-5-6)

## பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுப் பெரும் கைகலப்பு!

### ஒன்றரை மணிநேரம் நீடித்தது

யாழ்ப்பாணம்,நவ.16

யாழ்.பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் 'ராகிங்' சம்பவத்தின் எதிரொலியாக நேற்றுப் பகல் ஒரு மணியளவில் பல்கலைக்கழக மைதானத்தில் மாணவர்களுக்கிடையில் கைகலப்பு இடம்பெற்றது.

கலைப்பீடம் மற்றும் வணிக முகாமைத்துவ பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் இந்தக் கைகலப்பில் ஈடுபட்டனர்.

சுமார் ஒன்றரை மணி நேரமாக இடம்பெற்ற இந்தக் கைகலப்பின் போது சில மாணவர்கள் நகக் கீறல்கள் மற்றும் அடி காயங்களுக்கு ஆளானார்கள்.

மாணவர்களில் சிலர் அவர்கள் அணிந்திருந்த 'ஷேர்ட்'டுகளின் தெறிகள் அறுக்கப்பட்ட நிலையில் காணப்பட்டனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் சமாதான முயற்சிக்கு உதவுவதற்கு பிரிட்டிஷ் அரசு தயார்!

### வெளியுறவு அமைச்சர் தகவல்

லண்டன்,நவ.16

இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் தங்களது சமாதான முயற்சிகளுக்கு உதவுமாறு கேட்டால் அந்தப் பணியைச் செய்வதற்கு பிரிட்டன் தயாராக உள்ளது.

இவ்வாறு அடுத்த வாரம் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்யவிருக்கும் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெய்ன் தமது விஜயம் குறித்து நேற்றிரவு லண்டனில் தகவல் வெளியிடுகையில் கூறினார்.

இலங்கை இனப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காணும் விடயத்தில் நோர்வே மூன்றாவது அனுசரணையாளராகச் செயற்பட்டு வருவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். நோர்வேயின் அந்தப் பணியை பிரிட்டன் முழுஅளவில் ஆதரிக்கிறது. இந்த முயற்சிகளுக்கு

(10ஆம் பக்கம் பார்க்க)

## விமானப் பயணத்துக்கான 'ரிக்கெட்' இன்று வழங்கப்படும்

யாழ்ப்பாணம்,நவ.16

நாளை ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படும் முதல் நாள் விமான சேவையில் பயணம் செய்பவர்களுக்கான பயண அனுமதிப் பத்திரமும் பயணச் சீட்டும் இன்று காலை 10.30 மணியில் இருந்து யாழ்.சிவில் அலுவலகத்தில் வழங்கப்படவுள்ளன.

நேற்று வட மாகாண மீள் குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபையின் (றான்) அலுவலகத்தில் தமது விவரங்களைப் பதிந்து நம்பர் துண்டுகளைப் பெற்றவர்களுக்கே இன்று பயண அனுமதிப் பத்திரமும் பயணச் சீட்டும் வழங்கப்படும். பயணச் சீட்டுக்கள் யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தில் அமைந்துள்ள 'ஹெலிரூர்ஸ்' அலுவலகத்தில் வைத்து விமானப் படையினரால் விநியோகிக்கப்படும்.

ஒரு வழிப் பயணத்துக்கு 3 ஆயிரத்து 500 ரூபாவும் இரு வழிப் பயணத்துக்கு 6 ஆயிரம் ரூபாவும் அறவிடப்படும் என்றும்-

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் 14ஆவது "எய்ட்ஸ்" நோயாளி!

யாழ்ப்பாணம்,நவ.16

யாழ்.மாவட்டத்தில் மேலும் ஓர் "எய்ட்ஸ்" நோயாளி இனம் காணப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்திருந்த இளைஞர் ஒருவரின் இரத்தம் எடுக்கப்பட்டு சந்தேகத்தின் பேரில் எச்.ஐ.வி. பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது அவர் "எய்ட்ஸ்" நோயினால் பீடிக்கப்பட்டது தெரியவந்தது.

அவர் ஒரு வருடத்துக்கு முன்னர் வெளிநாடு சென்று திரும்பி வந்து கொழும்பில் தங்கியிருந்தார் என்றும் -

பின்னர் யாழ்ப்பாணம் வந்து அண்மையிலேயே திருமணம் செய்தார் என்றும் - தெரிவிக்கப்படுகிறது.

மீண்டும் ஓர் "எய்ட்ஸ்" நோயாளி

(10ஆம் பக்கம் பார்க்க)

### காங்கிரஸ் தலைவியாக மீண்டும் சோனியா

புதுடில்லி,நவ.16

இந்தியாவின் எதிர்க்கட்சித் தலைவி சோனியாகாந்தி மிக அதிகப்படியான வாக்குகளைப் பெற்று காங்கிரஸ் கட்சியின் தலைவியாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவிக்கு சோனியா காந்தியை எதிர்த்து கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஜிதேந்திர பிரசாதா போட்டியிட்டார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## 2ஆம் நாள் விமான சேவைக்கு பதிவுகள்

யாழ்ப்பாணம்,நவ.16

விமானத்தில் பயணம் செய்பவர்களின் விவரங்களைப் பதியும் பணி யாழ்.கண்டி வீதியிலுள்ள வடமாகாண மீள்குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபையின்(றான்) அலுவலகத்தில் இன்றும் இடம்பெறவுள்ளது.

இரண்டாவது நாள் விமானப் பயணத்துக்கான பதிவுகளே இன்று மேற்கொள்ளப்பட இருப்பதாகவும்-

அவசர அலுவலாக கொழும்பு செல்லும் அரச ஊழியர்கள், வெளி மாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணம் வந்து திரும்பிச் செல்ல முடியாதோர் வெளிநாட்டில் இருந்து யாழ்ப்பாணம் வந்து திரும்பிச்செல்ல முடியாதோர் மற்றும் நவம்பர் 9 ஆம் திகதி வரை பயண அனுமதிப்பத்திரம் பெற்றோர் ஆகியோருக்கு இரண்டாம் நாள் விமான சேவையில் முன்னுரிமை வழங்கப்படும் என்றும் - வடமாகாண மீள் குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபையின் இணைப்பாளர் எஸ்.குகராஜா தெரிவித்தார்.

நாளை வெள்ளிக்கிழமை இடம்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோவிலிருந்து நால்வர் நீக்கம்!

மட்டக்களப்பு,நவ.16

கட்சித் தலைமைப்பீடத்தின் உத்தரவுகளை மீறி நடந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் ரெலோ அமைப்பின் ஆரையம்பதி அலுவலகத்தைச் சேர்ந்த நான்கு பேர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

ரெலோ அமைப்பைச் சேர்ந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இது தொடர்பான அறிவிப்பை நேற்று விடுத்தார்.

ஆரையம்பதி பிரதேசப் பொறுப்பாளர் வரதன் மற்றும் நிர்மலன், கண்ணன், விந்தன் ஆகியோரே இவ்வாறு கட்சியிலிருந்து நீக்கப்பட்டவர்களாவர்.

கட்சி விதிகளை மீறி பொதுமக்களுடன் முறைகேடான முறையில் நடந்ததாகவும் -

ரெலோ அமைப்புக்கும் - பொது மக்களுக்குமிடையிலான நல்லுறவைச் சீர்குலைக்கும் விதத்திலும் நடந்து கொண்டதாகவும் - இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக செல்வம் அடைக்கலநாதன் அறிவித்துள்ளார். (இ-7-21-8)

## நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி

அன்பர்களும், நிறுவனங்களும், பாடசாலைகளும், ஆலயங்களும், சமூக நிலையங்களுமாக நேற்று(15-11-2000) 'நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி'க்கு தமது அன்பளிப்புக்களை வழங்கியிருந்தனர். அவர்களின் விவரங்கள் நாளைய உதயனில் வெளிவரும்.

**நேற்றுவரை இந்நிதிக்குக் கிடைத்த மொத்தத் தொகை ரூ 746,658**

## கன்னட நடிகர் ராஜ்குமார் வீரப்பனால் விடுவிக்கப்பட்டார்!

### 108 நாள் கடத்தல் நாடகம் முடிவடைந்தது





புதுடில்லி,நவ.16

சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பன் வசம் 108 நாள்கள் பணயக் கைதியாக வைக்கப்பட்டிருந்த கன்னடத் திரைப்பட நடிகர் ராஜ்குமார் நேற்றுக் காலை விடுவிக்கப்பட்டார். இவருடன் இவரது உறவினரான நாகேஷும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வீரப்பனால் பிடித்துச் செல்லப்பட்ட நால்வரில் நாகப்பா என்பவர் வீரப்பன் பிடியிலிருந்து தப்பி வந்ததும், ராஜ்குமாரின் மருமகனான கோவிந்தராஜ் வீரப்பனால் விடுவிக்கப்பட்டதும் தெரிந்தவையே.

ராஜ்குமாரை விடுவிக்கக் கோரி அரசு தூதுவராக 'நக்கீரன்' கோபால் முதலில் சத்திய மங்கலம் காட்டுப் பகுதிக்கு வீரப்பனைச் சந்திக்கச் சென்றிருந்தார். ராஜ்குமாரின் விடுதலைக்கு (10ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வாழ்த்துகின்றோம்



பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர்

**திருமிகு சின்னையா நடராஜலிங்கம்**

அவர்கள் சிரேஷ்ட முகாமையாளராக (Area Manager) பதவி உயர்வு பெற்றமையையிட்டு எமது மனமுவந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

*வங்கி சதுக்க வர்த்தகர்கள், பருத்தித்துறை.*

மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்,
சிவராஜ் ரேடிங்கோ,
கனன் போட்டோ
கொப்பிங் சேவிஸ்,
ஜெயகணேசா ஸ்ரோர்ஸ்.

(80569)



# தவறிவிட்டது

மீசாலை கிழக்கு மீசாலையைச் சேர்ந்த துரைராசா ஜீவகரன் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.091003475) மீசாலையில் இருந்து வடமராட்சிக்கு வரும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கொடிகாமம் றோட், நெல்லியடி அம்பிகா டிஸ்பென்சரியில் கொடுத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**க.துரைராசா,**
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(80577)


## 31 பேர் வருகை

கொழும்பு.நவ.16

விடுவிக்கப்படாத பகுதிகளில் இருந்து மன்னார்.விடத்தல்தீவு இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை நோக்கி 31 பொதுமக்கள் நேற்று வந்தாக இராணுவப் பேச்சாளர் சரத் கருணாரட்ண தெரிவித்தார். (இ-10)


**லஷ்சுமி சினிமா**
இணுவில்

அர்ஜுன், ரம்பா
நடித்த
**சுதந்திரம்**
ரீல்ஸ்
காட்சிகள்:10.30, 2.30
(பழையநேரம்)

**ராஜா யாழ்ப்பாணம்**

சிவா, மோகினி,
நாசர், ஸ்ரீவித்தியா
மற்றும் பலரின் நடிப்பில்
**சுதமான ரோஜாவே**
காட்சிகள்:10.30, 2.00 (பு.நே.)

**நாகம்ஸ் சுன்னாகம்**

அஜித் (இரு வேடம்),
சிம்ரன், விவேக்
நடித்த
**வாலி**
(ரீல்ஸ்)
காட்சிகள் - 11.00, 2.30 (பு.நே)
18 ஆம் திகதி (சனி) முதல்
அர்ஜுனின்
**அடிமைச்சங்கிலி**
(C/13816)



# ST. JOHN'S COLLEGE, JAFFNA.

## பழைய மாணவர் சங்கம்

23.11.2000 வியாழக்கிழமை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட செயற்குழுக் கூட்டம் 18.11.2000 சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும்.

செயற்குழு அங்கத்தவர்கள் அனைவரும் சமுகமளிக்கவும்.

(C/13841) - செயலாளர்.



# அறிவித்தல்

## இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைக்கு ஆள்சேர்த்துக் கொள்ளுதல்

2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தல் தொடர்பாக,

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் குடியிருக்கும் வைத்தியர்களின் விண்ணப்பங்கள் பாரமெடுக்கும் இறுதியான திகதி 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆர்.ஏ.ஏ.ரணவீர
*செயலாளர்,*
*தேசிய வைத்திய அமைச்சு.*

சுதேச வைத்தியத்துறை அமைச்சர்,
385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
'சுவசிரிபாய',
கொழும்பு - 10.
15.11.2000

(C/13845)



# கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன பிரபல கணித ஆசிரியர்
இரா. அருட்செல்வன் அவர்களின் தாயார்

**திருமதி இ. இரத்தினம் (ஆச்சி)**

அவர்கள் 13-11-2000 அன்று இறைபதம் அடைந்தார். அவரின் பிரிவால் துயருறும் ஆசிரியருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

இயக்குநர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்,
'BITSMAN' கல்வி நிறுவனம்,
மானிப்பாய்.

(80571)



# G.A.Q., 1st IN Com.

## யாழ்., பேராதனை(வெளிவாரி)

மேற்குறிப்பிட்ட பட்ட பாடநெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன.

பல்கலைக்கழகப் பதிவுகள், பாடநேர அட்டவணைகள் தொடர்பான சகல விவரங்களையும் நேரில் பெற்றுக்கொள்ளவும்.

விவரங்களுக்கு:- S.அருள்நங்கை,

**புதிய உயர் கல்லூரி,**

ஆரியகுளம்சந்தி, யாழ்.

(80560)



# பாராட்டிக் கௌரவிக்கின்றோம்

## லயன் எஸ்.ஜே.செல்வராஜா அவர்கள்

(முதலாம் குறுக்கு இணுவில் வீதி, மானிப்பாய் கிழக்கு.)



தென்னிந்தியத் திருச்சபை யாழ்.பேராலயத்தை சார்ந்தவரும் மெமோறியல், யாழ்ப்பாணக் கல்லூரிகளின் பழைய மாணவரும், இங்கிலாந்து ஜேசி தொழில் முகாமைத்துவ கலாசாலையின் வர்த்தக முகாமைத்துவ/நிர்வாகத் துறையில் சிறப்புத் தேர்வு பெற்றவரும், சர்வதேச ஐக்கிய உணவுக் கைத்தொழில் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் இணைப்பதிகாரியும் ★மானிப்பாய் கிறீன் வைத்தியசாலை, இணுவில் மல்லியோட் வைத்தியசாலைகளின் முன்னாள் செயலரும் ★ மானிப்பாய் பரிஸ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய இயக்குநரும் ★ உடுவில் அரச மத்திய மருந்தக அபிவிருத்திச் சபையின் தலைவரும் ★பாரதி சனசமூக நிலையச் செயலரும் ★ஆனந்தா விளையாட்டுக் கழக ஆலோசகரும் ★மானிப்பாய் திருச்சபையின் நிர்வாக ஆதீனப் பிரதிநிதியும் ★மெமோறியல் கல்லூரி அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினரும் ★பழைய மாணவர் சங்கச் செயலரும் ★ மானிப்பாய் மக்கள் குழு உறுப்பினரும் ★மானிப்பாய் வை.எம்.சீ.ஏ.நிர்வாகச் செயலரும் ★சர்வதேச லயன்ஸ் கழக மானி. வட்டப் பொருளாளரும்.

திருமணப் பதிவு தவறிய எழுபது தம்பதியினருக்கு தனது சுய முயற்சியால் ஒரே நாளில் லயன்ஸ் கழகம் மூலம் திருமணப் பதிவை சட்ட ரீதியாக மேற்கொண்டவரும் ★ஆசிரியர் தினத்தில் கவனிக்கப்படாதிருந்த வலி.தென்மேற்கு பிரிவு சிறுவர் முன்பள்ளி ஆசிரியர்களை லயன்ஸ் கழகம் மூலம் ஒன்றிணைத்துக் கௌரவித்து சிறுவர், மகளிர் மேம்பாட்டில் புதுமை படைத்தவருமாகிய லயன் எஸ்.ஜே.செல்வராஜா அவர்கள் அரசமைப்பு விவகார அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் மாவட்ட நீதிபதி B.சுப்பிரமணியம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தமையை நினைவு கூர்ந்து வாழ்த்துகின்றோம்.

அவரின் சமூகப் பணியின் பங்களிப்பும் சமூக மேம்பாட்டு செயற்பாடுகளும் என்றும் வாழ்க! வளர்க!

**மானி.,கிழக்கு பாரதி சனசமூக நிலையம்,**
**மானி.கிழக்கு ஆனந்தா விளையாட்டுக் கழகம்,**
**மானி.பரிஸ் பல நோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளை 25இன் கிளைக்குழு.**

(80565)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி வைரமுத்து ஆச்சிமுத்து

பெரியமாவடி சாவகச்சேரியை நிரந்த வசிப்பிடமாகவும் உரும்பிராய் மேற்கு உரும்பிராயைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி வைரமுத்து ஆச்சிமுத்து அவர்கள் நேற்று (15-11-2000) புதன்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து அவர்களின் அன்பு மனைவியும் செல்வரத்தினம், காலஞ்சென்ற சபாரத்தினம், கமலாம்பிகை(கொழும்பு), புவனேஸ்வரி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவக்கொழுந்து, கனகம்மா, தெய்வேந்திரம்(கனடா), சிவக்குமார்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கருணாநிதியின் அன்புப் பெரியதாயாரும் சிவானந்தம்(கனடா), நகுலாம்பிகை, பரமானந்தம்(கனடா), அசோக்குமார் (கனடா), யசோதரன்(கனடா), காலஞ்சென்ற விஜயரூபன் மற்றும் ரூபி (ஜேர்மனி), மோகனரூபன்(கனடா), காந்தரூபன் (லண்டன்), தர்சினி(பிரான்ஸ்), சாந்தினி (பிரான்ஸ்), சிவாசினி(பிரான்ஸ்), றோகினி(கனடா), சிவலோகநாதன் (யாழ்.போதனா வைத்தியசாலை), கல்பனா(கனடா), ஜெயந்தி(கனடா), வதனி(கனடா), வரதராஜன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது தற்காலிக வதிவிடமாகிய 'திருவேரகம்' மானிப்பாய் வீதி, உரும்பிராயில் நடைபெற்று இன்று (16-11-2000) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உரும்பிராய் வேம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மானிப்பாய் வீதி,*
*உரும்பிராய் மேற்கு.*

தகவல்:
வை.செல்வரத்தினம்(மகன்)

(80568)

## கந்தையா மயில்வாகனம்

சாவகச்சேரி நகரசபை முன்னாள் தலைவரும் பத்திரிகை நிருபரும் J.P.யும் ஆகிய கந்தையா மயில்வாகனம் நேற்று முன்தினம் (14.11.2000) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.11.2000) புதன்கிழமை கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றன என்பதை அறியத்தருகின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நிரந்தர முகவரி:-
*கென்ஸ்மன் லேன்,*
*சாவகச்சேரி.*

தகவல்:
ம.தர்மேந்திரலிங்கம் (மகன்)
ந.முத்துலிங்கம் (மருமகன்)

தற்காலிக முகவரி:-
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*

(80578)

# மோட்டார்சைக்கிளில் வந்தோரினால் கைது

யாழ்ப்பாணம்,நவ.16

கொக்குவில் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்களால் கைது செய்யப்பட்டுள்ளார் என அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நீதிராஜா வீதி, கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் சிவசுதன் (வயது25) என்பவரே அப்பகுதியில் உள்ள ஐயனார் கோயிலடியில் வைத்து சிவிலுடையில் வந்தவர்களால் கைது செய்யப்பட்டதாக அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# வடக்கு தொலைத் தொடர்பு சேவை மேலும் விஸ்தரிப்பு

## பிரதி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு,நவ.16

வடக்கில் தொலைத் தொடர்பு சேவையை மேலும் விஸ்தரிக்கப் போவதாக தொலைத் தொடர்புகள் பிரதி அமைச்சர் நஜீத்.ஏ.மஜீத் தெரிவித்துள்ளார்.

இந்த விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலம் தொலைபேசி பாவனையாளர்களுக்கு சிறந்த வசதிகளை வழங்க முடியும் என்றும் -

தொலைத் தொடர்புக்குப் புதிதாக விண்ணப்பித்துக் காத்திருப்பவர்கள் பற்றிய விவரம் ஆராயப்பட்டு வருகிறது எனவும் -

அதற்கான உடன் நடவடிக்கைகளை தான் மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-8)



எழுத்தாளர் தெணியானின் 'காத்திருப்பு' நாவல் அறிமுக விழா அண்மையில் தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இந் நிகழ்வில் எழுத்தாளர் தெணியான் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். விழாவுக்குத் தலைமை வகித்த பேராசிரியர் நா.ஞானகுமாரன், ஆய்வுரை நிகழ்த்திய பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஆகியோர் அருகில் அமர்ந்துள்ளனர். (ஐ)



யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் புதிதாக அமைக்கப்பட்ட சங்கத்தின் பொதுக் களஞ்சியம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

சங்கத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் களஞ்சியக் கட்டடத்தை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். சங்கத்தின் உப தலைவர் பெஞ்சமின் ஜேக்கப், இயக்குநர் சபை உறுப்பினர்கள் சபா தியாகராஜா, கே.யோகரத்தினம் மற்றும் சங்கத்தின் பொது முகாமையாளர் மு.சிவப்பிரகாசம், பொதுக் களஞ்சியப் பொறுப்பாளர் சி.திருநாவுக்கரசு ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்: பா.நந்தகுமார் - அரியாலை செய்தியாளர்)* (ஐ-17)



செங்கை ஆழியானின் 'மரணங்கள் மலிந்த பூமி' நாவல் வெளியீட்டுவிழா அண்மையில் யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது.

நாவலின் முதற் பிரதியை ஓய்வுபெற்ற பிரதி அதிபர் க.சிவராமலிங்கம், தமிழ்த்துறைத் தலைவர் எஸ்.சிவலிங்கராஜாவிடம் இருந்து பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம். அருகில் நூலாசிரியர் க.குணராசாவும் காணப்படுகிறார். *(படம்: பொ.இராஜேஸ்வரன்)* (ஐ-180)

# நோர்வேயின் சமாதான முயற்சிக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவு

கொழும்பு,நவ.16

இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் நோர்வே அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவு தெரிவித்துள்ளது.

வன்னி சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சந்தித்துப் பேச்சு நடத்தியது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையிலேயே மேற்படி ஆதரவு குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் நாட்டில் சமாதானம் உருவாக முயற்சி செய்ய வேண்டும்.

பல வருடகாலமாகக் கொடிய யுத்தத்தினால் பாதிப்படைந்துவரும் மக்களுக்கு இத்தகைய சமாதான முயற்சிகள் பெரும் ஆறுதல் அளிப்பதாக அமைந்துள்ளன. எனவே பொது மக்களின் விருப்பத்துக்கு மதிப்பளித்து அனைத்துத் தரப்பினரும் செயற்படவேண்டும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## திருடப்பட்ட பொருள்கள் மீட்பு

சுன்னாகம்,நவ.16

ஒரு வருடத்துக்கு முன்னர் திருடப்பட்ட ஆலயப் பொருள்கள் சுன்னாகம் பொலீஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் நவம்பர் மாதத்தில அளவெட்டி வெளியையல் ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் திருட்டுப் போன பொருள்களே மீட்கப்பட்டுள்ளன.

தேர்மணி, இரண்டு பெரிய குத்து விளக்குகள், ஒலிப்பதிவு சாதனங்கள் என்பன திருடப்பட்டிருந்தன. இவற்றில் ஒலிப்பதிவு சாதனங்கள் தவிர்ந்த ஏனைய பொருள்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் -

ஏனைய பொருள்களை மீட்கும் வகையில் பொலீஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் -

ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (ஐ-27)

## ஒஸ்லோவிலும் ஆனையிறவுச் சமர் திரைப்படம்

கொழும்பு,நவ.16

கடந்த ஏப்ரலில் இடம்பெற்ற ஆனையிறவுப் படைத்தளம் மீதான புலிகளின் தாக்குதல் தொடர்பான திரைப்படத் தொகுப்பு நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவிலும் திரையிடப்பட்டு வருகிறது.

லண்டனிலும் இந்தத் திரைப்படத் தொகுப்பு காண்பிக்கப்பட்டு வருவது தெரிந்ததே. ஒஸ்லோவில் ஆங்கிலப்படங்கள் மற்றும் நோர்வேத் திரைப்படங்கள் திரையிடப்படும் தியேட்டர்களில் இந்த 'ஆனையிறவு வெற்றிச் சமர்' திரைப்படம் திரையிடப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களால் இந்தத் திரைப்படம் தொடர்பான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. ஒஸ்லோவின் க்றோன்லாண்ட் பகுதிகளில் இந்தத் திரைப்படம் தொடர்பான துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. தமிழர்களின் கடைகள் மற்றும் தமிழர் வாழும் பிரதேசங்களில் இத்தகைய துண்டுப்பிரசுரங்கள் பெருமளவில் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-8)

## நீர்வேலியில் தேடுதல்

யாழ்ப்பாணம்,நவ.16

நீர்வேலிப் பகுதி நேற்றுமுன்தினம் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது.

நீர்வேலி வாய்க்கால்தரவைச்சந்தி, நீர்வேலி கந்தசாமி கோயிலடி, கரந்தன், மாசிவன் ஆகிய பகுதிகளை உள்ளடக்கி இத் தேடுதல் நடத்தப்பட்டது.

காலை 6 மணியில் இருந்து நடத்தப்பட்ட இத் தேடுதலின் போது பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனையோர் அப் பகுதியில் இருந்து வெளியேறத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. (இ-15-173)

## மிக் விமானம் குண்டு வீச்சு

அரியாலை கிழக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் நண்பகல் மிக் விமானங்கள் குண்டு வீச்சை மேற்கொண்டன.

சேதவிவரம் தெரிய வரவில்லை.

அதே சமயம் - நீண்ட நாள் இடைவெளியின் பின்னர் உளவு விமானம் நேற்றுமுன்தினம் பிற்பகலில் வட்டமிட்டு நோட்டமிட்டது. (இ-3-6-139)

## புதிய பங்கீட்டு அட்டை விநியோகம்

வலி.மேற்கு,நவ.16

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சகலருக்கும் புதிய பங்கீட்டு அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை புதில் பிரதேச செயலர் என்.வேதநாயகன் மேற்கொண்டுள்ளார். (ஐ-175)

# இனத்தின் பெயருடன் கூடிய கட்சிகளைத் தடை செய்க!

## அரசுக்கு பௌஸி ஆலோசனை

கொழும்பு,நவ.16

இனத்தின் பெயருடன் கூடிய கட்சிகளைத் தடைசெய்ய வேண்டும் என்று பெருந் தெருக்கள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி அரசுக்கு யோசனை தெரிவித்துள்ளார்.

இனத்தைக் குறிக்கும் வகையில் கட்சிகள் ஆரம்பிக்கப்படுவதால் நாட்டில் இனவாதம் தூண்டப்படுகிறது. அந்த வகையில் 'சிஹல உறுமய', தமிழர் விடுதலைக் கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகள் தடைசெய்யப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இனத்தைக் குறிக்கும் கட்சிகளை ஆரம்பிப்பது சிங்கப்பூரில் தடைசெய்யப்பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டிய அமைச்சர், இவ்வாறான கட்சிகளைத் தூக்கி எறிந்துவிட்டு பொ.ஐ.முன்னணி, ஐ.தே.க.போன்ற கட்சிகளை வளர்க்க அனைவரும் திரள வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்.

# அச்சுவேலி கோழிப்பண்ணை தொடர்பாக திணைக்களப் பணிப்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணம்,நவ.16

அச்சுவேலி கோழிப்பண்ணை நிர்வாகம் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் இருந்து கூட்டுறவுக் கிராமிய வங்கியிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக செய்தி ஊடகங்களில் வெளியான தகவல் குறித்து மேற்படி திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் பொ.இராமநாதன் பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மைய நாள்களில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மாகாணச் செய்திகள் மற்றும் பத்திரிகைகளில் அச்சுவேலி பிராந்திய கோழிப்பண்ணை நிர்வாகம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திலிருந்து கூட்டுறவுக் கிராமிய வங்கியிடம் ஒப்படைக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதில் எமது திணைக்களம் தொடர்பாக தவறான கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி பண்ணை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள நிர்வாகத்தின் கீழ் நஷ்டத்தில் இயங்கியமையால் இதன் நிர்வாகம் கூட்டுறவுக் கிராமிய வங்கியினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது என்று மேற்படி செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை நாம் முற்றாக மறுக்கின்றோம். பண்ணையின் வரவு செலவுகளை ஆராயும் எவரும் இதனைக் கண்டு கொள்ளலாம். மேலும் மாதாந்தம் திணைக்களத்துக்குக் கிடைத்த இலாபங்கள் தொடர்பாக ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தின் மதிப்பீட்டு அறிக்கை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இலாபத்தின் ஒரு பகுதியிலேயே அடுத்த கட்ட குஞ்சு உற்பத்திக்கான பெற்றோர் இன (**Parent Stock**) கோழி இனங்கள் நெதர்லாந்து, இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளன.

பெறுமதி மிக்க நல்லினக் கோழி இனங்களுடன் தொடர்பு கொண்ட இச்செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டே மாவட்ட மட்டத்தினுள்ளேயே தேவையான நிதியினைக் கையாளக்கூடிய அங்கீகாரத்தை - பண்ணை நிர்வாகத்தை - கூட்டுறவுத்துறையிடம் சில வருடங்களுக்கு ஒப்படைப்பதற்கு மாகாண அமைச்சின் செயலாளருடனான கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன் - என்றுள்ளது. (இ-7)

# கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரி கட்டாய லீவில்!

கொழும்பு,நவ.16

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி தம்மிக ரணதுங்க உடனடியாகச் செயற்படும் வகையில் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிறைவேற்றுக் குழுவின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

கடந்த மூன்று ஆண்டுகளில் இலங்கை கிரிக்கெட் அணி பங்கு பற்றிய போட்டிகளுக்கான தொலைக் காட்சி உரிமை வழங்கல்களில் ஒழுங்கு விதிகளை மீறியதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த விவகாரங்கள் குறித்துப் பூரண விசாரணைகள் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## ஊக்குவிப்புப் போட்டிகள்

காரைநகர்,நவ.16

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச்சபை முன்பள்ளி மாணவர்களுக்கிடையே மாதாந்தம் நடத்தும் கல்வி ஊக்குவிப்புப் போட்டிகளில் நவம்பர் மாதத்துக்கான போட்டிகள் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் வாரிவளவு நல்லியக்கச் சபை மண்டபத்தில் நடைபெறும்.

காரைநகரில் உள்ள பாலர் பாடசாலை மாணவர்கள கலந்துகொள்ளும் இந்தப் போட்டிகளில் வெற்றியீட்டும் மாணவர்களுக்கு அமரர்கள் சி.க.கந்தையா, வள்ளியம்மை ஞாபகார்த்தப் பரிசில்கள் வழங்கப்படஉள்ளதாக வாரிவளவு நல்லியக்கச் சபை செயலர் சரவணமுத்து பத்மநாதன் தெரிவித்துள்ளார். (இ-73)

## கூட்டம்

காரைநகர்,நவ.16

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள சுருவில் (ஜே/59) கிராம உத்தியோகத்தர் பிரிவின் சமுர்த்திச் செயலணிக் கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு புளியங்கூடல் நெசவு நிலையக் கட்டடத்தில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக சமுர்த்தி வலயம் இரண்டின் முகாமையாளர் செல்வி அ.அறிவரசி தலைமையில் நடைபெறும்

இக்கூட்டத்துக்கு கௌரவ ஆலோசகர்களாக ஊர்காவற்றுறை பிரதேச செயலக சமுர்த்தி இணைப்பு முகாமையாளர் செல்வி பிரோன் வியோனிற்றா, சுருவில் கிராம உத்தியோகத்தர் எஸ்.விஜயரட்ணம் ஆகியோர் கலந்துகொள்வர். (இ-73)

### பருவமழை பொய்த்ததால்- வலி.மேற்கில்

# 40 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற் பயிர்கள் கருகி அழிந்தன!

வலி. மேற்கு, நவ. 16

சங்கானை, வட்டுக்கோட்டை, சுழிபுரம், அராலி ஆகிய பகுதிகளில் சுமார் 40 ஹெக்டேயர் வயல் நிலப்பரப்பில் முளைத்த நெற் பயிர்கள் மழை பொய்த்ததால் கருகியுள்ளன.

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் பெரும்போக நெற்செய்கையின் போது இந்த ஆண்டு சுமார் ஆயிரத்து இருநூறு ஹெக்டேயர் பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. பருவமழை போதியளவு பெய்யாமையினால் சங்கானை, வட்டுக்கோட்டை, சுழிபுரம், அராலி ஆகிய இடங்களில் சுமார் 40 ஹெக்டேயர் நிலப்பரப்பில் முளைத்த பயிர்கள் முற்றாகக் கருகி நாசமடைந்துள்ளன. பெரும்பாலான வயல் நிலங்களில் விவசாயிகள் முளைத்த பயிர்களைக் காப்பாற்றுவதற்காக நீர் இறைக்கும் இயந்திரத்தின் மூலம் நீர்பாய்ச்சுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

(ஐ-175)

### தொழில் நுட்ப நிறுவக கற்கை நெறிகளுக்கான

## நேர்முகப் பரீட்சைகள் டிசெம்பர் 4 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 16

திருநெல்வேலியிலுள்ள யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவகத்தில் 2001 ஆம் கல்வியாண்டிற்கான கற்கை நெறிகளில் சேர்ந்து கொள்வதற்காக 700க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர்ந்துள்ளதாக நிறுவக வட்டாரங்கள் தெரிவித்தன.

கற்கை நெறிகளுக்குப் புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை டிசெம்பர் 4 ஆம் திகதி ஆரம்பமாகின்றது என்று மேற்படி நிறுவகப் பணிப்பாளர் ரி. இராஜரட்ணம் தெரிவித்தார்.

டிசெம்பர் 4 ஆம்திகதி உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா பகல்நேர கற்கை நெறிக்கும் —

டிசெம்பர் 5 ஆம்திகதி உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா மாலை நேரக் கற்கை நெறிக்கும்—

டிசெம்பர்6 ஆம் திகதி உயர் தேசிய டிப்ளோமாவுக்கும்—

டிசெம்பர்7 ஆம் திகதி ஆங்கில தேசிய டிப்ளோமா (பகல், மாலை)கற்கை நெறிக்கும்—

டிசெம்பர் 8 ஆம்திகதிவியாபார கற்கைக்கான தேசிய டிப்ளோமா, வியாபார கற்கைக்கான நிதியியல் டிப்ளோமா போன்றவற்றுக்கும் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

நேர்முகப் பரீட்சைகள் யாவும் மேற்குறிப்பிட்ட திகதிகளில் காலை 9மணிக்குத் திருநெல்வேலியில் உள்ள நிறுவக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-5)

## ஞானியார் கல்விக் கழகத்துக்கு நன்றி கூறல்

இம்பர்சிட்டி பருத்தித்துறையில் இயங்கும்

**ஞானியார் கல்விக் கழகத்தினால்**

**2000 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வடமராட்சியில்**

சித்தி பெற்ற 158 மாணவர்களைப் பாராட்டி கௌரவித்து பரிசில்கள் வழங்கும் நிகழ்வு சென்ற 05-11-2000 ஞாயிற்றுக்கிழமை **வட இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில்** நடத்தப்பட்டது.

பெரிய ஒரு பிரதேசத்தை உள்ளடக்கி பெருந்தொகையான சின்னஞ்சிறாரர்களை அழைத்து இப்படியாக நடத்தும் நிகழ்வினை நான் அறிந்தவரை ஞானியார் கல்விக் கழகமே செய்துவருகின்றது.

விழா நடைபெற்ற அன்று மேடையில் ''கல்வியே கண்'' என்ற பதாகை இருபுறமும் இருக்க நடுவே ஞானியார் கல்விக் கழகம் என்ற பதாகையுடனும் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் என மண்டபத்தை நிரம்பி வழியச் செய்திருந்தனர். கழகத்தலைவர் திரு. வே. நவரத்தினராசா விழாவின் தொடக்கத்தையும் முடிவையும் மிகக் கவர்ச்சியாக கொண்டுபோய் இனிது நிறைவேற்றினார்.

இக்கழகம் பெற்றோரை இழந்த 100 மாணவர்களுக்கு தரம் 11 வரை ஒவ்வொரு வருடமும் பாடசாலை உபகரணங்களை வழங்கி வருவதுடன் 2000 ஆம் ஆண்டு தரம் 5 மாணவர்களுக்கு மாதிரி வினாத்தாள்கள் தயாரித்து வடமராட்சி கிழக்கு மாணவர்களுக்கு இலவசமாக வழங்கி வந்தது. இதன் பயனாக வடமராட்சி கிழக்கில் இவ்வருடம் 4 மாணவர்கள் சித்தியடைந்தனர். சித்தியடைந்தவர்களில் எனது மகளும் ஒருவர் என்ற வகையில் இக்கழகத்திற்கும், இந்த மாதிரி வினாத்தாள்கள் தயாரிப்பதில் உதவி புரிந்த நெல்லியடி மெ. மி. த. க. பாடசாலையைச் சேர்ந்த மூன்று ஆசிரியைகளுக்கும் வடமராட்சி கிழக்கு மக்கள் சார்பாக நன்றி கூறுகின்றேன். மேற்படி நிகழ்வில் கழகத்தினால் அந்த ஆசிரியர்களை அறிமுகம் செய்ததுடன் பாராட்டி கௌரவித்தமையும் ஒரு சிறப்பம்சமாகும்.

இக்கழகத்தின் ஸ்தாபகர் ஆகிய திரு. தி. பார்த்திபன் அவர்கள் அவரின் 21 வயதிலேயே கழகத்தை ஆரம்பித்து இன்று வரை செயல்படுத்தி வருவதை எண்ணும்போது என்னை வியக்க வைக்கிறது. லண்டனில் இருந்து பார்த்திபனும் அவரது நண்பர்களும் வழங்கும் நிதியைக்கொண்டு கழகத்தை நல்லமுறையில் செயல்படுத்தும் கழகத் தலைவர், உறுப்பினர்களுக்கும் லண்டன் வாழ் திரு. தி. பார்த்திபனுக்கும் அவரது நண்பர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

பா. நடராஜா,

வத்திராயன் வடக்கு, தாளையடி. (80387)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, நவ. 16

தெல்லிப்பழை அருள் மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் கார்த்திகை மாத சங்கிராந்தி தீர்த்தத் திருவிழா விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை, வழிபாடுகளுடன் நடைபெறும்.

சுவாமி வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் பஜனை, கூட்டுப் பிரார்த்தனையும் இடம் பெறும். (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, நவ. 17

நல்லூர் அருள் மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயிலில் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு சங்கிராந்தி தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

(ஐ-30)

★ ★ ★

கொக்குவிலில் உள்ள சத்ய சாயிபாபா நிலையத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் 5-30மணி வரை சாயிபஜனையும், கூட்டுப்பிரார்த்தனையும், விசேடமாகத் திருவிளக்குப் பூசையும், இலட்சார்ச்சனையும் நடைபெறும்.

(ஐ-30)

## பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு

கரவெட்டிப் பகுதியில் உள்ள ஏழு சனசமூக நிலையங்களின் பாலர் பாடசாலைகளுக்கு தளபாடங்கள், பாடசாலை உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் என்பன கரவெட்டி பிரதேசசபையால் வழங்கப்பட்டுள்ளன.

அல்வாய் தெற்கு பாரதி சனசமூக நிலைய பாலர் பாடசாலை, இமையாணன் மேற்கு நாவலர் சனசமூக நிலைய பாலர் பாடசாலை, மண்டான் மாவலி சனசமூக நிலைய பாலர் பாடசாலை, கரவெட்டி கிழக்கு வளமதி சனசமூக நிலைய பாலர் பாடசாலை, கரவெட்டி கிழக்கு நாமகள் சனசமூக நிலைய பாலர் பாடசாலை, கரணவாய் வேதாரணியேஸ்வரா சனசமூக நிலைய பாலர் பாடசாலை, கரவெட்டி மேற்கு இராச கிராம சனசமூக நிலைய பாலர் பாடசாலை ஆகியவற்றுக்கே தளபாடங்கள் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பாலர் பாடசாலை ஆசிரியைகளிடம் கரவெட்டிப் பிரதேச சபைத் தலைவர் வ. நடராசா இவற்றை கையளித்தார். கரவெட்டி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ. சுப்பிரமணியமும் அங்கு சமுகமளித்திருந்தார். (ஐ-173)

## சிசு பிரசவித்த இளம்தாய் பரிதாபமாக மரணம்!

யாழ்ப்பாணம், நவ. 16

பெண் சிசு ஒன்றைப் பிரசவித்த இளம் தாய் ஒருவர் நஞ்சுக் கொடி விழாததால் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நெடுந்தீவு மகாவித்தியாலயத்துக்கு அருகில் வசிக்கும் ஐந்து பிள்ளைகளின் தாயாரான திருமதி தவம் ரவிச்சந்திரன் (வயது 37) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் மாலை நெடுந்தீவு மாவட்ட ஆஸ்பத்திரியில் பெண் சிசு ஒன்றைப் பிரசவித்த இந்தத்தாய் நஞ்சுக் கொடி விழாததால் அவஸ்தைக்குள்ளானார் எனவும்—

எனினும் நெடுந்தீவில் இருந்து அவசர நோயாளர்களை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வருவதற்கான போக்குவரத்து வசதி இன்மையால் சம்பவ தினம் இரவு 10.30 மணியளவிலேயே பலத்த சிரமங்களின் மத்தியில் இவர் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டார் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

எனினும் இடைவழியில் அவர் உயிரிழந்துவிட்டார்.

(இ-7)

### உரும்பிராய்

## சைவத் தமிழ் வித்தியாலயத்துக்கு மூன்று மாடிக் கட்டடம்

யாழ்ப்பாணம், நவ. 16

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் மூன்று மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை வித்தியாலய அதிபர் சு. யோகராசா தலைமையில் நடைபெற்றது.

யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபரும், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் செயலாளரும், றோட்டரிக் கழகத்தின் யாழ். மாவட்டத் தலைவருமான அ. பஞ்சலிங்கம் சம்பிரதாயபூர்வமாக கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டார்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் க. கனகசிங்கம் மற்றும் மேற்படி பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் நலன் விரும்பிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேற்படி கட்டடத்துக்கான நிதி வடமாகாண புனரமைப்பு அதிகார சபையால் வழங்கப்பட்டது. (இ-10)

## ஆலயங்கள் பாடசாலைகளுக்கு 14 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

வலி. மேற்கு, நவ. 16

இந்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளுக்கும், ஆலயங்களுக்கும் 14 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

துணைவி அ.மி.த.க. பாடசாலைக்கு 2 லட்சம் ரூபாவும், வட்டுக்கோட்டை மத்திய கல்லூரிக்கு 2 லட்சம் ரூபாவும், சித்தன்கேணி சிறிகணேசா வித்தியாலயத்துக்கு 2 லட்சம் ரூபாவும், கீரிமலை வீதி பெரியதம்பிரான் ஆலயத்துக்கு ஒரு லட்சம் ரூபாவும், வட்டுக்கோட்டை கலவிஓடை மோதக மாமரப் பிள்ளையார் ஆலயத்துக்கு ஒரு லட்சம் ரூபாவும், சங்கரத்தை வீரபத்திர சமேதர பத்திரகாளி ஆலயத்துக்கு ஒரு லட்சம் ரூபாவும், சித்தன்கேணி பிள்ளையார் ஆலயத்துக்கு ஒரு லட்சம் ரூபாவும், பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி ஆலயத்துக்கு ஒரு லட்சம் ரூபாவும், அராலி தெற்கு வைரவர் ஆலயத்துக்கு 2 லட்சம் ரூபாவும், சித்தன்கேணி சலவைத் தொழிலாளர்களுக்கு நீர்த் தாங்கி அமைப்பதற்கு ஒரு லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆறுலட்சம் ரூபா கல்வித் திணைக்களத்துக்கும்—

ஆலயங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 7 லட்சம் ரூபா வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்துக்கும்—

சலவைத் தொழிலாளர்களுக்கு நீர்த்தாங்கி அமைப்பதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒரு லட்சம் ரூபா வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கும்—

வழங்கப்பட்டுள்ளது.

(ஐ-175)

## பயிற்சி நெறிக்கான தேர்வு

யாழ்ப்பாணம், நவ. 16

பிராந்திய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரியின் பெண்களுக்கான மீன்பிடி உதவியாளர் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆண்டு எட்டு வரையான கல்வித்தகைமை உடைய 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் மேற்படி பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் பயிற்சிநெறிக்கான தேர்வு நேற்று புதன்கிழமையும், இன்றுவியாழன், நாளை வெள்ளி ஆகிய தினங்களிலும்நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-10)

## பிணையில் செல்ல அனுமதி

நெல்லியடி, நவ. 16

பருத்தித்துறை பஸ் நிலையப் பகுதியில் வைத்து இ.போ.ச. பஸ் நடத்துநர் ஒருவரைத் தாக்கிய குற்றச் சாட்டுத் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவரை 5 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்லுமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை துறைமுகத் தொழிலாளியான கரவெட்டி இராச கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் வசீகரன் (வயது 26) என்பவர் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

குறித்த சந்தேக நபரைச் சிறைச்சாலை அதிகாரிகள் நேற்றுக் காலை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்த சமயம் 5 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்லுமாறு மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

(இ-109)

## தமிழ்நாடு சட்டப் பேரவையில் உறுப்பினரல்லாத
# வீரமணி குறித்து கருணாநிதி
# பேசியது பண்பான செயல் அல்ல!
## திராவிடர் கழகம் கருத்துத் தெரிவிப்பு

சென்னை, நவ. 16
தமிழ்நாடு சட்டப் பேரவையில் உறுப்பினராக இல்லாததால், அங்கு பதிலளிக்க வாய்ப்பில்லாத திராவிடர் கழகத்தலைவர் கி. வீரமணியைப் பற்றி சட்ட சபையில் முதல்வர் கருணாநிதி பேசியிருப்பது சட்டசபைப் பண்புகளுக்குப் பெருமை சேர்ப்பது ஆகாது என்று திராவிடர் கழகம் கருத்துத் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் சார்பில் உதவிப் பொதுச் செயலாளர் கனிபூங்குன்றன் சென்னையில்நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் அந்த அறிக்கையில்,

இலங்கை அரசால் நடத்தப்படும் இனப்படுகொலைகளிலிருந்து தமிழர்களைக் காப்பாற்ற பாடுபடுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தவிர வேறு இக்கம் இல்லை என்பதால் தமிழீழத் தலைவர்கள் உரிமைகளைக் கருதி திராவிடர் கழகம் கருத்துத் தெரிவிப்பது எப்படித் தவறாகும்?

பேரறிஞர் அண்ணா தனி நாட்டுப் பிரிவினையை கைவிட்டிருந்தாலும் அதற்கான காரணங்கள் இன்றும் மறையவிலலை. அதையும் கருணாநிதி கைவிட்டு விட்டாரா? என்று கனிபூங்குன்றன் கேள்விகள் எழுப்பியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை சட்டப் பேரவைக் கூட்டத்தில் நடிகர் ராஜ்குமாரின் விடுதலைக்காக வீரப்பனிடம் பேச்சு நடத்த தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறனை அனுப்பியது குறித்து எதிர்க்கட்சிகள் கூறிய விமர்சனங்களுக்கு முதல்வர் கருணாநிதி பதிலளிக்கையில்,

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை இளைய சகோதரன் எனக்கூறிய வீரமணியோடு ஜெயலலிதா, மூப்பனார் உட்பட எதிர்க்கட்சியினர் இணைந்திருப்பது சரி என்றால் நெடுமாறனை தமிழக அரசு தூதராக அனுப்பியது சரியே என்றும் —

தனித்தமிழ் நாடு கோரிக்கையைத் தமிழகத்தில் யார் எழுப்பினாலும் அதனை அடக்கியே தீருவோம் என்றும் கூறியிருப்பதற்கு பதிலளித்தே திராவிடர் கழகம் தற்போது அறிக்கை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது (ஒ 8)

## உலக அரங்கில்

## மேற்கு ரயில்வே தலைமையகத்தில் தீ விபத்து!

இந்தியாவின் மும்பை நகரில் மேற்கு ரயில்வே தலைமையகக் கட்டடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் ரயில் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு கேந்திரம் மோசமாகப் பாதிக்கப்பட்டது.

இதனால் 16 ரயில் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டதுடன், 25 ரயில்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டன. மேற்கு ரயில்வேயின் சேவைகள் எப்போதும் இல்லாத அளவில் சீர்குலைந்துள்ளது.

## 4 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதால்
# மேற்குக்கரை நகரங்களில் ராணுவக் கெடுபிடி அதிகரிப்பு

காஸா, நவ. 16
ஜோர்டான் நதியின் மேற்குக்கரை நகரங்கள் மீது இஸ்ரேலியப் படைகள் தடைகளை விதித்து கெடுபிடிகளை அதிகரித்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்குக்கரையில் பலஸ்தீனர்கள் 4 இஸ்ரேலியர்களை கொலை செய்ததையடுத்தே இஸ்ரேல் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பலஸ்தீனர்கள் வாழும் பகுதிகளில் கூட்டம் கூடவும், அரசியலில் செயற்பாடுகளை நடத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. பலஸ்தீனக் குடியிருப்புப் பகுதிகளில் திடீர் சோதனைகளை நடத்தி வரும் இஸ்ரேலியப்படையினர் பிரதான பாதைகளில் வீதித்தடைகளை ஏற்படுத்தியுள்ளனர்.

மேற்குக்கரை மற்றும் காஸாவில் இஸ்ரேலியப் படைகளுக்கும் பலஸ்தீனர்களுக்கும் செப்ரெம்பர் மாத இறுதியிலிருந்து நடந்து வந்த வன்முறை மோதல்கள் தணிந்திருந்த போதும் சமீபத்தில் பலஸ்தீன தீவிரவாதத் தலைவர் ஒருவர் கொல்லப்பட்டதை அடுத்து மீண்டும் அதிகரித்துள்ளன. இந்த மோதல்களில் இதுவரை 200 பேருக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். இறந்தவர்களில் பெரும்பாலானோர் பலஸ்தீனர்கள் ஆவார்கள். (ஒ-8)

# மசூதியில் யாகம் நடத்த முயற்சி; இந்தியாவில் 80 இந்துக்கள் கைது!

புதுடில்லி நவ 16
இந்தியாவில் மசூதி ஒன்றினுள் யாகம் நடத்த முயற்சி செய்தஇந்து மதவாத அமைப்பினர் கைது செய்யப்பட்டுள்ளனர்

புதுடில்லியில் புராதனச் சிறப்புப் பெற்ற 'குதுப்மினர்' கற்கோபுரத்தின் அருகே உள்ள மசூதியினுள் யாகம் நடத்தப்போவதாக இந்து மதவாத அமைப்புகளான விஷ்வ ஹிந்து பரிவுத் மற்றும் பஜ்ரங்தள் ஆகியவை அறிவித்திருந்தன.

இதன்படி நேற்று முன்தினம் காலை இந்து அமைப்புக்களைச் சேர்ந்த சுமார் 100 பேர் மதவாதக் கோஷங்களை எழுப்பிக்கொண்டு மசூதிக்குள் நுழைய முயன்றனர். அவர்களைக் கலைந்து போகும்படி கூறிய பொலிஸார் கூட்டம் கலைந்து செல்லமறுக்கவே 80 பேரைக் கைது செய்ததாகக் கூறப்படுகிறது.

இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் குதுப்மினார் பகுதியில் நிகழ்ந்த இந்தச் சம்பவத்தையடுத்து அங்கு கடும் பதற்றம் நிலவுகிறது. கலகம் அடக்கும் பொலீஸாரும், சிறப்புக் காவற் படையினரும் அப் பகுதியில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## 'தடா' குற்றங்களை விரைவில் விசாரிக்க
# கர்நாடக மாநில அரசுக்கு தனி நீதிமன்றம் அமைக்க அனுமதி

பெங்களூர், நவ. 16
சந்தன மரக்கடத்தல்காரன் வீரப்பனுக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் வழக்குத் தொடரப்பட்டுள்ள தமிழர்கள் மீதான விசாரணைகளை விரைவில் நடத்தி முடிக்க தனி நீதி மன்றம் அமைக்கும் கர்நாடக அரசின் கோரிக்கைக்கு பெங்களூர் உயர்நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

செய்தியாளர்களிடம் பேசிய கர்நாடக சட்ட அமைச்சர் சந்திரகௌடா, இத் தகவலைத் தெரிவித்ததுடன் தனி நீதிமன்ற நீதிபதி விரைவில் நியமிக்கப்படுவார் என்றும் கூறினார்.

வீரப்பனுக்கு உதவிய குற்றச்சாட்டின் கீழ் 121 தமிழர்களை கர்நாடக அரசு கைது செய்து சிறையில் அடைத்திருந்தது. இவர்களில் 70 பேர் பிணையில் வெளிவந்து வழக்குகளைச் சந்திக்கின்றனர். 51 தமிழர்கள் சிறையில் உள்ளனர்.

பணயக் கைதியாக உள்ள நடிகர் ராஜ்குமாரை விடுவிக்க வீரப்பன், விதித்த நிபந்தனைப்படி 121 தமிழர்கள் மீதான வழக்குகளை விலக்கி அவர்களை விடுவிக்க கர்நாடக அரசு எடுத்த முடிவுக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்து விட்டதால், தமிழர்கள் மீதான வழக்குகளை விரைவில் நடத்தி முடிக்க தீர்மானிக்கப்பட்டதாக கருதப்படுகிறது. (ஒ 8)

## ஊழல்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள
# சொனி சுகார்ட்டோவின் மாளிகை இந்தோனேசியாவில் பறிமுதல்

ஜகார்த்தா, நவ. 16
இந்தோனேசியாவின் முன்னாள் அதிபர் சுகார்ட்டோவின் இளைய மகன் சொனி சுகார்ட்டோவின் மாளிகையை பொலீஸார் பறிமுதல் செய்தனர்.

சுகார்ட்டோவின் ஆட்சிக் காலத்தில் சுமார் 45 கோடி டொலர் பெறுமதியான அரசுச் சொத்துக்களை கையாடியதாக சொனி மீது குற்றஞ்சுமத்தி தொடரப்பட்டுள்ள வழக்கில் நீதிமன்ற ஆணைப்படி பொலீஸார் சொனியின மாளிகையைப் பறிமுதல் செய்துள்ளனர்.

பொலீஸார் சென்ற போது சொனியின் மாளிகையில் இருந்த அவரது மனைவி டட்டா பறிமுதல் அறிவிப்புப் பத்திரத்தில் கையெழுத்திட மறுத்து விட்டார். ஆனாலும் பொலீஸார் மாளிகையைக் கைப்பற்றி கதவுகளைப் பூட்டி சீல் வைத்தனர்.

இந்தோனேசியாவில் அரச குடும்பத்துக்கு நிகரான உயர் பதவி வகிந்த ஒருவரின் குடும்பத்தைச் சேர்ந்தவரது சொத்தை அரசு பறிமுதல் செய்திருப்பது இதுவே முதன் தடவையாகும்.

சில மாதங்களுக்கு முன்னர் ஜகார்த்தா பங்குச் சந்தை அலுவலகம் அருகே இடம்பெற்ற குண்டு வெடிப்புக்கு காரணமானவர் என்ற குற்றச் சாட்டின் பேரில் சொனி சுகார்ட்டோவுக்கு இந்தோனேசிய நீதிமன்றம் 18 மாத சிறைத் தண்டனை விதித்துள்ளது.

இந்தத் தண்டனைக்கு கருணை மனுவை அதிபர் அப்துல் ரஹ்மான் வாஹிட் நிராகரித்ததை அடுத்து சொனி தற்போது தலைமறைவாகி உள்ளார் அவரைப் பொலீஸார் தேடி வருகின்றனர். (ஒ-8)

## நிராகரிப்பு

அமெரிக்க அதிபர் தேர்தலில் ஆள்கள் மூலம் புளோரிடா மாநிலத்தில் வாக்குகளை எண்ணுவதற்கான காலக்கெடுவை நீடிக்க உத்தரவிடும்படி அல்கோரிஸ் ஜனநாயகக் கட்சியினர் தாக்கல் செய்த கோரிக்கை மனுவை புரோரிடாபெடரல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

## வேலை நிறுத்தம்

இந்தியாவில் அரசுத்துறை வங்கிகளை தனியார் மயமாக்கும் டத்திய அரசின் முடிவை எதிர்த்து 10 லட்சம் வங்கி ஊழியர்கள் நடத்திய ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தால் நாடெங்கிலும் வங்கிச் சேவைகளில் மோசமான பாதிப்பு ஏற்பட்டது.

வங்கித்துறையில் அரசின் பங்குகளை 33 சதவீதமாக குறைத்து தனியாரின் பங்குகளை அதிகரிக்க மத்திய அரசு முடிவுசெய்துள்ளது.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 18 — 02 — 1917
உதிர்வு 17 — 10 — 2000

### அமரர் இராசேந்திரம் குமணன்

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
எங்கள் நெஞ்சம் துடிதுடிக்குதையா!
நீங்கள் எம்மை விட்டுச் சென்றதேனோ?
உங்கள் ஆத்மா சாந்தி அடைக!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

குடும்பத்தினர்.

சின்னக்குளம்,
கந்தரோடை,
சுன்னாகம்.

இராஜேஸ்வரி வீதி,
நாயன்மார்கட்டு.
(80559)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
31—12—1918

உதிர்வு
16—11—1995

அமரர்
### சுப்பையா மாணிக்கம்
(Retired Asst. Superintendent of Police)

அன்பின் திருவுருவாக, அமைதியின் உறைவிடமாக, பண்பில் சிகரமாக வாழ்ந்து மீளாப் பயணம் சென்ற அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்.

ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(80566)

# 43 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 1950 — 06 — 20



உதிர்வு 2000 — 10 — 03

அமரர்

## அப்புத்துரை - தம்பிராஜா (தேவு)

(உதைபந்தாட்ட மத்தியஸ்தர்)

இணுவில் கிழக்கு தியேட்டர் வீதியைச் சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அமரர் அப்புத்துரை தம்பி ராஜா அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நேரில் வந்து உதவி புரிந்தவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்து இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட வர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித் துக் கொள்கின்றோம்.

மனைவி,
பிள்ளைகள்.

தியேட்டர் வீதி,
இணுவில். (80535)

# நினைவகலா 31 ஆம் நாள்

தோற்றம் 29 — 02 — 1940



மறைவு 16 — 10 — 2000

அமரர்

## செபஸ்ரியன் பேர்க்மஸ்ன் சபாநாயகம்

(முன்னாள் தொழில் நுட்ப வியலாளர்
யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவகம்,
ஜேர்மன் மொழிப் போதனாசிரியர்)

காலமெல்லாம் எம் நெஞ்சில்
காவியமாக வாழ்ந்த எம் நாயகமே!
மாதமொன்றாகியும் மறையுமோ
உம் நினைவு.
மாறாத சோகத்தில்
உம் பிரிவால் வாடுகின்றோம்.
மனதைத் தேற்றியே நம்
ஆண்டவனை வேண்டுகின்றோம்
ஆத்மா சாந்தி பெற.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி - ஆனந்தராணி,
மகன் - றூடி (லண்டன்),
மருமகள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர், சகோதரி, உற்றார்.
உறவினர், நண்பர்கள்.

இவர் வைத்தியசாலையில் நோயுற்றிருந்த வேளை யில் அன்புடன் சிகிச்சையளித்து உதவிய இல. 10 ஆம், 7 ஆம் விடுதி டாக்டர்மாருக்கும், தாதியர், ஊழியர் அனைவருக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் எமக்கு உதவிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எம் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, மரணச் செய்தியைக் கேள்வியுற்று நேரில் வந்து அஞ்சலி செய்து ஆறுதல் தெரிவித்தோருக்கும், தொலை பேசி, கடிதம் மூலமும் ஆறுதல் தெரிவித்தோருக் கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக் கும், எம்முடன் கூட இருந்து உதவி செய்தோருக் கும் எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி ஆனந்தராணி சபாநாயகம்
மகன்:- றூடி (லண்டன்)
குடும்பத்தினர்.

33, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (80544)

# ஆறுமுகநாவலர் குருபூசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ. 16

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ் தானத்தின் ஏற்பாட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை எதிர்வரும் ஞாயிற் றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங் கம்மா அப்பாக்குட்டி தலை மையில் நடைபெற உள்ளது

துர்க்காபுரம் மகளிர் இல் லப் பிள்ளைகளின் பண் ணிசை, பேச்சு மற்றும் ஆறு திருமுருகனின் சிறப்புச் சொற் பொழிவு என்பனவும் இடம் பெறும்.

(ஐ-30)

* * *

அரியாலை, நவ. 16

அகில இலங்கைத் திரு முறை மன்றம் நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குரு பூசைத் தினம் எதிர்வரும் 19 ஆம் திகதி நல்லூர் முத் திரைச் சந்தி ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடத்தில் முற் பகல் 9 மணிக்கு நடை பெறும்.

மன்றத் தலைவர் பண்டி தர் வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலா சார மண்டபத்தில் விற்றிருக் கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சிலைக்கு விசேட பூஜை வழி பாடுகள் இடம்பெறும்.

(ஐ-17)

* * *

கொழும்புத்துறை, நவ. 16

உடுவில் ஸ்ரீ முருகமூர்த்தி வித்தியாலய இந்து மாணவ மன்ற ஆதரவில் மன்றப் பொறுப்பாசிரியர் சா. முத் துக்குமாரசாமி தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குரு பூசைத்தினம் தொடர்பான நிகழ்ச்சிகள் நடைபெறும்

பூசை வழிபாட்டை அடுத்து ஒய்வு பெற்ற அதிபர் "சமூக ஜோதி" கா. கணேசதாசன் "நாவலர் பிறந்திலரேல்" என்ற தலைப்பில் உரை யாற்றுவார்.

(30)

# விரிவுரை வகுப்புகள்

யாழ்ப்பாணம், நவ. 16

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் நடத்தும் இளஞ் சைவப் புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைகளுக் குத்தோற்றுவோருக்கான விரி வுரை வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில்வண்ணை நாவலர் மகா வித்தியாலயத் தில் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை நடை பெற்று வருகின்றன.

(ஐ—30)

# லண்டனில் பயிற்சிப் பாசறை

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ் பல்கலைக்கழக கல் வியற்றுறைத் தலைவர் க. சின் னத்தம்பி தொழிற்பயிற்சிப் பாசறையில் கலந்து கொள் வதற்காக லண்டன் சென் றுள்ளார்.

இலங்கையில் உள்ள சகல பல்கலைக்கழகங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட 14 பேர் மேற்படி தொழிற் பயிற்சிப்பாசறையில் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து இவர் மட்டுமே சென் றுள்ளதாகவும் இந்த தொழிற் பயிற்சிப்பாசறை இம் மாதம் நடுப்பகுதியில் ஆரம்பித்து அடுத்த மாத நடுப்பகுதி வரை நடைபெறும் எனவும் யாழ் பல்கலைக்கழக வட்டா ரங்கள் தெரிவித்தன.

இதே வேளை —

தற்போது யாழ். பல்கலைக் கழக கல்வியியற்றுறைத் தலை வரின் பதில் கடமையை சிரேஷ்ட விரிவுரையாளர் செல்வி எஸ் அருளானந்தம் பொறுப்பேற்றுள்ளார்.

(ஐ-5-6)

# காணவில்லை

எனக்குச் சொந்தமான மருன் (Marron) நிறமுடைய K.M W. மோட்டார் சைக்கிளை (இல. 500 -6341) 13-11-2000 திங்கள் மாலை முதல் காணவில்லை. தகவல் அறிந்தவர்கள் தயவு செய்து உடன் தொடர்பு கொள்ளவும்.

கணேசன் சென்ரர்,
தாவடி வடக்கு,
தாவடி.

(சி/13835)

# நீங்கா நினைவில் ஈராண்டு

மண்ணில் 16 — 10 — 1972



விண்ணில் 16 — 11 — 1998

## செல்வி ரெரன்சியா காந்திமதி பீரிஸ்

(முன்னாள் திருநெல்வேலி தாதியர் இல்லம் மற்றும்
திருச்சிலுவை வைத்திய நிலையம் — தாதி)

அன்பின் நாயகியே,
மண்ணுலக வாழ்வை இடைநடுவில் விட்டு
விண்ணுலகம் சேர்ந்த உந்தன் பிரிவை
எண்ணி எண்ணிக் காலமெல்லாம்
உண்ணாமல் உறங்காமல் தவிக்கின்றோம்!
உந்தன் மணக்கோலம் காணமுன்பே
உந்தன் மரணக்கோலம் கண்டோமம்மா
வருடம் இரண்டு ஆனதம்மா
தங்கள் பிரிவால் தவிக்கின்றோம்!

தாய், சகோதர சகோதரிகள்,
மைத்துனன்மார், அம்மம்மா,
பெறாமக்கள்.

15/1A, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம். (80473)

# 31 ஆம் நாள் நீங்கா நினைவில்..

அன்னை மடியில் 06 — 07 — 1953



ஆண்டவன் அடியில் 17 — 10 — 2000

அமரர்

## மகாரட்ணம் கருணாகரன் (கருணா)

(Tharsan லொறி உரிமையாளர்)

அன்பின் சிகரமாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் குடும்பத்தின்
தலைமகனாய்
வந்து உதித்த எம் அன்புத்தெய்வமே மகனே!
எம் உயர்வுக்காய் உழைத்த உத்தமனே அண்ணா!
எம் உயர்வுக்காய் வாழ வழி காட்டிய எம்
அன்புத் தெய்வமே அப்பாவே!
எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு
எங்கு சென்றீர்கள்?
ஒரு திங்கள் ஆயினும் எம் மனதில் வீற்றிருப்பீர்
என்றென்றும்!

இன்று (16 - 11 - 2000) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்பு டன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
தாய், மனைவி,
பிள்ளைகள், சகோதரர்கள்.

இலங்கை வங்கி முன்பாக,
மானிப்பாய். (80540)

# உதயன்.

## எலும்பும் தோலுமாகும் யாழ். மக்கள் சுகவாழ்வு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள நான்கு லட்சம் மக்களுக்கும் கண் சம்பந்தமான வியாதிகளுக்கு சிகிச்சைச் செய்வதற்கு ஒரே ஒரு கண் சிகிச்சை நிபுணர் தான் சேவை செய்கிறார். அதே போல காது மூக்குத் தொண்டைப் பகுதிச் சிகிச்சைக்கும் ஒரே ஒரு நிபுணர் தான் சேவை செய்கிறார். சத்திர சிகிச்சை நிபுணர்கள் மூன்று பேர் தான் சேவையாற்றுகிறார்கள்.

ஆனால் கொழும்பில் தடக்கி விழும் இடங்களில எல்லாம் யாழ்ப்பாணத்து டாக்டர்களின் சிகிச்சை நிலையங்கள் உள்ளன. லண்டன் போன்ற வெளி நாடுகளில் டாக்டர்களாகவும் வைத்திய நிபுணர்களாகவும் பணிபுரியும் இலங்கையர்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணத் தமிழர்கள்.

தன்னைப் பெற்ற தாய் ஊரில் பிச்சை எடுக்கும் அதே வேளை, மகன் காசியில் செய்யும் தானதர்மங்கள் செய்வது போன்ற மேற்படி சாபக்கேடு மூன்று தசாப்தங்களுக்கு முன்னரே எங்கள் சமூகத்தைப் பிடித்துக் கொண்டது.

ஆனால் இப்போது நிலைமை கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகி மிகவும் மோசமடைந்து வருகிறது. கடுமையாகக் கடுக்கும் அளவுக்கு யாழ்ப்பாணச் சமூகத்தைக் கடித்தும் வருகிறது.

குடாநாட்டில் நிலவும் போர்ச் சூழ்நிலையை — கெடுபிடிகளை, வசதிக் குறைவுகளை — தாங்கமுடியாது இவர்கள் தம்து சொந்த மண்ணைவிட்டு ஓடினார்கள்; தொடர்ந்து ஓடுகிறார்கள். தடுக்க முடியாத இந்த வெளியேற்றத்தால் பாதிக்கப்படுபவர்கள் வெளியே செல்வதற்கு வசதியற்று இங்கு வாழும் மக்களே.

இதன் இன்னொரு பாதகமான விளைவை மீண்டும் வைத்தியத் துறையைச் சுட்டிக் காட்டியே எடுத்துக் கூற வேண்டியுள்ளது. யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி— போதனா வைத்தியசாலை — தவிர்ந்த ஏனைய அரசாங்க ஆஸ்பத்திரிகளில், ஒன்பது டாக்டர்கள் மட்டுமே பணிபுரிகிறார்கள். இது உண்மையான ஆளணித் தேவையில் பதினொரு சதவீதம் மட்டுமே! அதாவது குடாநாட்டில் டாக்டர்களுக்கான 72 வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன.

யாழ்ப்பாணத்தில் வைத்திய சேவை எந்தளவு அடிமட்டத்துக்கு நலிந்து, மெலிந்து போயுள்ளது என்பதை இதன் மூலம் எவரும் புரிந்து கொள்ள முடியும். வைத்திய சேவை மெலிந்தால் மக்களின் 'சுக வாழ்வு ஒட்டிய வயிறும் எலும்பும் தோலுமாகிவிடும்!

இத்தனைக்கும் அரசாங்கத்தின் அட்டவணையில் யாழ்ப்பாணக் குடாநாடு விடுவிக்கப்பட்ட பிரதேசம். இங்குள்ள மக்களின் நலன்கள் குறைவின்றிக் கவனிக்கப்படுவதாகப் பிரசாரம் வேறு செய்யப்படுகிறது.

மக்கள் நலன் கருதிச் சேவையாற்றுவதே தமது தொழில் என்று கூறிக்கொள்ளும் அரசியல்வாதிகளோ கையாலாகாது முடங்கியுள்ளனர். டாக்டர்கள் குடாநாட்டுக்கு வருகிறார்கள் இல்லை; இருப்பவர்களும் வெளியே போகிறார்கள்; நாம் என்ன செய்யமுடியும் என்று முணுமுணுத்தவாறு ''மக்கள் சேவை'' புரிகிறார்கள் இவர்கள்.

தட்டிக் கேட்கவும் எவரும் இல்லை; மக்கள் நலனுக்கு உழைக்கவும் எவருமில்லை என்ற ஓட்டைக் கப்பலாக யாழ்ப்பாணத்தார் வாழ்க்கை தாழ்ந்துகொண்டிருக்கிறது.

# பதினெட்டுப் படியேறி பக்தியுடன் வணங்கினால் பாவம் தொலையும்!

கார்த்திகை முதலாம் நாளான இன்று சபரிமலை ஐயப்பனை நோக்கிய.விரதம் ஆரம்பமாகின்றது. விரதநாள் முழுவதும்நாம் எப்படி வாழப் போகின்றோம் என்பதன் பரீட்சையே இவ்விரதம்.

இந்த ஐயப்பனின் விரதத்தினால் எளிமை — தூய்மை- அனைவரையும் சமமாகநோக்கும் தன்மை — அதிலும் ஒவ்வோர் உருவிலும் இறைவன் உறைகின்றான் என்பதை வெளிப்படுத்தும் பாத நமஸ்காரம் போன்ற உயர்ந்த இலட்சியங்கள் தெளிவு பெறுகின்றன.

பல நாடுகளிலிருந்து சாதி- மொழி — சமய வேறுபாடுகளின்றி அனைவரும் சேருமிடம் சபரிமலை. அறிமுகமில்லாத புதியவர்கள் ஒருவரையொருவர்கண்டதுமே சுவாமி சரணம் என்பார்கள். ஐயப்பா சரணம் என்று பதிலையும் பெறுவார்கள் சிறுவர்களை -மணிகண்டன் என்றும், சிறுமிகளை-கொச்சி என்றும் பெரியவர்களை ஐயப்பா என்றும். பெண்களை-'மஞ்ச மாதா' என்றோ அல்லது 'அம்மா சுவாமி' என்றே அழைப்பது வழமை.

ஐயப்பன்– ஐயனார் - ஹரி



மெய்யோடு நெய் கொண்டு போனால் - ஐயனை நீ காணலாம்'' என்பது அருள் மொழி.

மாதா- பிதா-குரு தெய்வம் என்ற வாக்கின்படி பெற்றோர் ஆசீர்வாதத்தோடு சிறந்த ஒரு குருசுவாமியினால் மாலைஅணிந்து விரதமிருந்து

தினமும் காலை - மாலை இருவேளையும் குளிர்ந்த நீரில் நீராடி ஐயப்பனின் 180 சரணக் கோவையைச் சொல்லி மனதார திரிகரண சுத்தியோடு வழிபடவேண்டும்.

தேங்காய் மனிதனின் உடலையும் உள்ளே நிரப்பும் உயி

## சாமியே சரணம் ஐயப்பா!

ஹரபுத்திரன்-சாஸ்தா எனப் பல நாமங்கள் கொண்டுவழிபடப் பெற்றாலும்-சபரிமலையிலுள்ள தவக்கோலத்தில் நித்திய பிரமச்சாரியாக காட்சிதரும் லாவண்யமிக்க எம்பெருமான் ஏழைகளுக்கு அருளுகின்ற கலியுக தெய்வமாகவே விளங்குகின்றான்.

''நாம் நினைத்தது நடக்கவும் எமது பாவங்கள் தொலையவும் பொய்யின்றி

ரையும் குறிக்கும். தேங்காயிலுள்ள கண்ணைத் துவாரம் செய்து நீரை வெளியேற்றி அதனுள் நெய்யை அடைத்து தலையில் சுமந்து சென்று பம்பை நீராடி — அன்னதானமிட்டு- பிதிர்வழிபாடு செய்து எம்முன்னோர்களை நினைவுபடுத்தி - பதினெட்டுப்படியை அடைந்து - படித்தேங்காய் உடைத்து இறைவன் சந்நிதியை அடைதல் வேண்டும்.

மகர சங்கிராந்தியன்று சூரிய அஸ்தமன நேரத்தில் காந்தமலையில் மூன்று முறை தெரியும் ஜோதிரூபம் பூரணம் பெற்ற ஆன்மாக்களுக்கு சாயுச்சிய பதவியை அளிப்பது போன்று தோற்றம் பெறும்.

பக்தர்கள் தம்மை மறந்து ''சுவாமியே'' ''சுவாமியே''

— தங்க. முகுந்தன்

சரணம் ஐயப்பா! என்று ஆர்ப்பரித்து கண்கள் நீர்மாரி பொழிய தலைமேல் கைகளைக் குவித்து வணங்கும் காட்சியை நினைக்கின்றபோது மெய் சிலிர்க்கின்றது. மனிதனைத் தெய்வமாக்க வல்லது இவ்விரதம்.

★

## சென். ஜோன்ஸ் தேசிய பாசறை

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினருக்கான தேசிய பாசறை டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை அவிசாவளையில்நடைபெறவுள்ளது.

சென். ஜோன்ஸ் முதலுதவிச் சங்கமும் படையினரும் யாழ். கிராமிய மாவட்டத்தைச்சேர்ந்தவர்களும் இந்தப் பாசறையில்கலந்துகொள்வர்.

இதேவேளை —

சென். ஜோன்ஸ் முதலுதவிச் சங்கமும் படையும் — யாழ். கிராமிய மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான விசேட பயிற்சியும் ஒன்றுகூடலும் நாளை மறுதினம் சனிக்கிழமை முதல் இரு தினங்களுக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில்நடைபெறவுள்ளன.

முதலுதவிச் செய்முறைப் போட்டிகளில் கிராமிய மாவட்ட இறுதித் தேர்வு சனிக்கிழமை காலை 10 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறும். (ஐ-7)



## சாயி சிந்தனை

எம்முள்ளே எதிரிகள் எமது இதயத்தில் இருக்கும் இருள்தான். நாம் செய்ய வேண்டியது நமது இதயத்தை ஒளியால் — சாந்தி, அன்பு, தூய்மை, நல்லெண்ணம் ஆகியவற்றால் நிரப்ப வேண்டியது மட்டுமே. அப்போது கோபம், காமம், பொறாமை, பேராசை, பெருமை மறைய ஆரம்பிக்கும். உணர்ச்சிகளை அழிக்க இயலாது என்பதை நாம் கவனிக்க வேண்டும். அவை அடிஅறி மனதில் எப்போதும் உண்டு ஒளி மங்கத் தொடங்க இருள் மேலும் ஒருமுறைமேல் எழும் ஆகவே நாம் எப்போதும் எம்மை அன்பு, சாந்தி, நல்லெண்ணம் என்பவற்றால் நிரப்புவதில் அவதானமாக இருக்க வேண்டும். அப்போது எமது எதிரிகள்மேலே எழமாட்டார்கள். எமக்குச்சாந்தி தரக்கூடிய பெரும் சக்தி அன்புதான்; தூய்மையான சுயநலமற்ற அன்பாகும்.

ஆதாரம்: பஜனாவளி

# காயமடைவோரின் எண்ணிக்கை உயர்வதால் இரத்தம் ஏற்றும் தேவையும் அதிகரிக்கிறது

'குருதிப் பரிசோதனைகளும் அவற்றின் பயன்பாடுகளும்' என்னும் தலைப்பில் நினைவுப் பேருரையாற்றிய யாழ். போதனா வைத்தியசாலை நோயியல் பிரிவுத் துறைத் தலைவர் டாக்டர் செல்வி பரமேஸ்வரி சின்னப்பா தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மக்களுக்கு மோட்டார் சைக்கிள் பாவனையில் அதிக பிரியம் ஏற்பட்டதன் விளைவாக விபத்துக்கள் பெருகிக் காயமடைவோருக்கு இரத்தம் ஏற்ற வேண்டிய தேவை அதிகரித்துள்ளது. இதனால் இரத்தத்தின் மூலம் பரவும் நோய்கள் தொற்றும் வாய்ப்பும் அதிகரித்துள்ளது. இரத்தம் ஏற்றப்படுவதற்கு முன் எய்ட்ஸ், செங்கண்மாரி, மலேரியா, மேகநோய் ஆகியவற்றுக்கான பரிசோதனைகளைச் செய்து, இந் நோய்கள் தொற்றாதிருக்க இயலுமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் காயமுற்றோரின் உறவினர்கள் தாங்கள் இரத்தம் வழங்குவதைத் தவிர்ப்பதற்காக இரத்தத்தை விலைக்கு விற்பவர்களை உறவினர்கள் என்று அறிமுகஞ் செய்து அவர்கள் மூலம் இரத்தம் தருவதால் இரத்தத்தின் மூலம் நோய்கள் தொற்றும் ஆபத்து நீடிக்கிறது.

''இற்றைக்கு எண்பது ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணப் பாரம்பரியத்திற்கு அமையப் பெண்கள் குடும்பத்திற்கான சமையல் பணியைச் செய்பவர்களாக வீட்டினுள் முடங்கிக் கிடந்தனர். தங்களிடமுள்ள திறமைகளையும், கல்வியின் மகிமையையும் அவர்கள் அறியாதிருந்தனர். இக் காலத்தில் இள வயதினராக இருந்த தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் 'கல்வி கற்ற ஒவ்வொருவரும் கட்டாயமாக வேறொருவருக்குக் கல்வி கற்பிக்க வேண்டும்' (EACH ONE TEACH ONE) என்ற கல்வித் திட்டத்தை அமுல் நடத்தி, வீட்டிலிருந்த பெண்களுக்கு அடிப்படைக் கல்வி கிடைக்க வழி வகுத்தார். இதனால் விழிப்புணர்வு பெற்ற பெண்கள் வீட்டிற்கு வெளியே வந்தனர். உயர்கல்வி பெற்று இன்று உயரிய பதவிகள் பலவற்றை வகிக்கின்றனர். இந் நிலைக்குப் பெண்கள் உயர வழிவகுத்த பெரியாருக்கு நினைவுப் பேருரை நிகழ்த்திப்பெண்கள் சார்பாக நன்றி நவில்கிறேன்''.

தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் நினைவுப் பேருரை நிகழ்ச்சி அண்மையில் இணுவில் இந்துக் கல்லூரியில நடைபெற்றது. அங்கு இடம்பெற்ற உரைகளின் தொகுப்பு இது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர் எஸ். வர்ணகுலராஜா தலைமையுரை நிகழ்த்துகையில் கூறியதாவது:-

பாடசாலைகள் மூலம் முறையான கல்விப் போதனை ஆரம்பமான காலத்தில், பெண்கள் மட்டுமல்ல ஆண்கள் பலரும் கல்வி கற்கத் தயங்கினர். இதற்குக் காரணம் தமிழிலுள்ள 247 எழுத்துக்களையும் பெரிய எண்ணிக்கையாகக் கருதி அத்தகைய பெரிய தொகையான எழுத்துக்களை எழுதக் கற்பது கடினம் என அவர்கள் எண்ணிப் பயந்ததேயாகும். 1900 ஆண்டில் பிறந்த தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் அவர்கள் இவர்களது பயத்தைப் போக்குவதற்குக் 'கையெழுத்துப் போடக் கற்றுக்கொள்' என்னும் திட்டத்தை நடைமுறைப் படுத்தி முதலில் அவர்களது பெயர்களை எழுதுவதற்குத் தேவையான எழுத்துக்களை மாத்திரம் கற்பித்தார். சில எழுத்துக்களை எழுதிப் பழகும் போது, எழுதப் பழகுவது அவ்வளவு கடினமானது அல்ல என்பதை உணர்ந்து, அவர்கள் பாடசாலைகளுக்குச் சென்று முறையான கல்விகற்க வழி வகுத்தார். இதுவே அவர் மேற்கொண்ட முதலாவது கல்விப் பணியாகும்; இதுவே முறைசாராக் கல்வியின் ஆரம்பமாகும் — என்றார்.

இணுவில் மத்திய கல்லூரி அதிபர் திரு துரை. எங்கரசு பேசுகையில்:— தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் நூற்றாண்டான இந்த ஆண்டில, அவரது நினைவாகப் பல நினைவுப் பேருரைகள் துறைசார் நிபுணர்களால் நிகழ்த்தப்படுவதால் அவர் அன்று தொடங்கிய கல்விப் பணி இன்றும் தொடர்கிறது ஆண்டு 10 க்கான விஞ்ஞானபாடத்தில் குருதி தொடர்பான பகுதி புதிதாக அறிமுகம் செய்யப்பட்டதால் அதனைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் கற்கும் மாணவர்களுக்கும் ''குருதிப் பரிசோதனைகளும் அவற்றின் பயன்பாடுகளும்'' என்ற தலைபபில் நிகழ்ததப் பட்டபேருரைபரந்த அறிவை வழங்கிப்பேருதவி புரிந்துள்ளது. இதனை ஒழுங்கு செய்த தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் நினைவுக் குழுவினர் கல்விச் சமுதாயத்தின் இன்றைய தேவையை உணர்ந்து செயற்பட்டுள்ளனர் — என்று கூறினார்.

★

## நாளை

கார்த்திகை 2

வெள்ளிக்கிழமை

திதி: ஷஷ்டி.

பிற்பகல் 3.52 வரை.

நட்சத்திரம்: பூசம்

முன்இரவு 9.37 வரை

சுபநேரம்: 6 08 – 7 38

ராகுகாலம்: 10.38 – 12.08

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

உன்னைப் பற்றி மக்கள் தவறாகப் பேசினால் அதனை எவரும் நம்பமாட்டார்கள் என்ற முறையில் வாழாதே.

- பிளேட்டோ

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இசைவகுப்புகள்

எமது 'நியூ வீணா கானம்' இசை மன்றில் கிறிஸ்தவர்களுக்கான (R.C/ Non R.C) கீதங்கள் சகல (மேலை/ கீழை) வாத்தியத்திலும் கற்பிக்கப் படும். தொடர்பு: செல்வீநந்தினி ரங்கன் (B.A. Hons), 60, வைமன் வீதி, நல்லூர்.

(80472)

## பொய்யாமொழி ஜோதிடம்

விவாகத்தடை, தொழில்தடை, கல்வித்தடை, பிரயாணத்தடை என் பன தீர ஆலோசனை வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஜாதகத்துடன் வரவும். தொடர்பு: செவ்வாய், சனி ஆகிய நாள்களில் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி, நல்லூர். ஞாயிற்றுக் கிழமை பழம் பிள்ளையார் கோயில் மடம், மல்லாகம். (80553)

## கைவரைப் பலன்

விஞ்ஞான முறைப்படி நன்கு ஆராய்ந்து பலன் கூறுவதோடு இளம் பிராயத்தினரிடம் பெருங்குற்றம் புரிவதற்கான மனப்பாங்கு முளைவிடும் அபாயம் உள்ளதா எனவும் தெரிவிக்கப்படும். தொடர்பு: 7, அய்யனார் கோயில் தெரு, வண்ணார்பண்ணை.

(80528)

## விற்பனைக்கு

சொந்தப் பாவனையில் உள்ள ஜம்ஹுறா ஓகன் விலை 2500/-ரூபா மற்றும் நஷனல் பனசோனிக் ரேடியோ RX 1830 விலை 2000/- ரூபா விற்பனைக்குண்டு. தொடர்பு: பயோகராஜா, 'செங்கமலம்', அச்சுவேலி வடக்கு. (டைப்றைட்டிங் வீடு). (80537)

புடைவைக் கடைக்கு ஏற்ற அலுமாரிகள், குளிர்சாதனப் பெட்டி என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C/13842)

# சிறைகளின் பாதுகாப்பை அதிகரிக்கப் பணிப்பு

கொழும்பு,நவ.16

களுத்துறை, பூஸா தடுப்புமுகாம்களின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு நீதியமைச்சர் பட்டி வீரக்கோன் உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி தடுப்பு முகாம்களில் தமிழ் இளைஞர்கள் பெரும் எண்ணிக்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

தடுப்பு முகாமில் இருந்து நீதிமன்றத்திற்கு கைதிகள் கொண்டு செல்லப்படும் போது விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் - என்றும் அமைச்சர் பணித்துள்ளார்.

தம்மை தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள தடுப்பு முகாம்களுக்கு மாற்றுமாறு அண்மையில் கோரியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ-8)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை

திருமதி ரேணுகாதேவி சிவசோதி அவர்களின்

**அன்புத் தந்தையார்**

**சின்னத்துரை நடராசா**

அவர்கள் இறைவனடி சேர்ந்தமையையிட்டு துயருறும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்,
திருநெல்வேலி.

(80563)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
23 - 08 - 1920



மறைவு
17 - 10 - 2000

திருமதி

**செல்லையா நல்லம்மா** அவர்கள்

(சன்லைற் றைக்கிளினேர்ஸ் ஸ்தாபகரின் மனைவி)

தாளாத கீர்த்தியோடு தரணியில் வாழ்ந்தாயம்மா!
தரமுடன் மக்கள் வாழ தவத்தினைச் செய்தாயம்மா!
சூழாமல் எம்மை துன்பம் சுபீட்சங்கள் சேர்த்தாயம்மா!
சூரியப் பிரகாசமாய் நல் ஒளி பெருகிற்றம்மா!
மாளாத சோகம் சூழ எங்கே மறைந்தீர்களம்மா?
மக்களும் சுற்றமும் புலம்ப எமையேன் பிரிந்தீரம்மா!
நாளெல்லாம் எண்ணி வாழ நற்பணிகள் செய்தீரம்மா!
நலமுடன் சிவன் தாளில் சேர
நாமிங்கு பிரார்த்திக்கின்றோம் அம்மா!

இன்று (16-11-2000) வியாழக்கிழமை முற்பகல் 11மணிக்கு நடைபெறும் அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*30/2, மருதடி வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(80548)

## தவறிவிட்டது

வெள்ளிமயில் இராஜேஸ்வரி என்பவருடைய விசேட அடையாள அட்டை 08-11-2000 அன்று மானிப்பாய் ஊடாக பொன்னாலைக்குச் சென்ற பஸ்வண்டியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் உடுவில வீதி, மானிப்பாயில் உள்ள றொபிக் கொம்பனியில் ஒப்படைக்கவும். (80545)

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சி.நந்தமுகுந்தன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 722 031725v), விசேட அடையாள அட்டை என்பன யாழ்நகருக்கும் கொக்குவிலுக்கும் இடையில் 11.11.2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சிவகுருநாதன் நந்தமுகுந்தன், மஞ்சவனப்பதி, 2 ஆம் வீதி, கொக்குவில் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (80546)

நடராசா வர்ணதேவன் (கோபி) என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.0903028732) கதிரிப்பாய்க்கும் அச்சுவேலிச் சந்திக்கும் இடையில் 13-11-2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஆங்கிலக் கல்லூரி, சந்நிதி வீதி, அச்சுவேலி எனும் முகவரியில் கொடுத்து உதவவும். (80567)

## பணிப்பெண் தேவை

யாழ். இந்து மகளிர் கல்லூரிச் சுற்றாடலில் இருக்கும் வீட்டிற்குப் பணிப்பெண் தேவை. 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது. விளம்பர இல. 1135, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(c/13834)

## 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

வலிகாமம்மேற்கு,நவ.16

தென்மராட்சி, யாழ்ப்பாணம்,நல்லூர்,கோப்பாய் ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்து சுளிபுரம் கிழக்கு, பனிப்புலம், சங்கானை மேற்கு, சங்கானை மத்தி ஆகிய இடங்களில் தங்கியிருக்கின்ற 187 குடும்பங்களுக்கு இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு இன்று வியாழன் பி.ப 2மணிக்கு சங்கானை மக்கள் வங்கியில் வழங்கப்படவுள்ளது.

சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறு வலிகாமம் மேற்கு பிரதேச செயலக திட்டமிடல் உதவி பணிப்பாளர் கே.தர்மராஜா கேட்டுள்ளார்.

(ஐ-175)

## கருத்தரங்கும் செயலமர்வும்

வலிகாமம்தெற்கு,நவ.16

சண்டிலிப்பாய், சங்கானை கல்விக் கோட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பாடமேம்பாட்டு மீளாய்வுக் கருத்தரங்கும் செயலமர்வும் நாளை மறுதினம் சனிக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

(ஐ-152)

# ஷெல்லினால் குடும்பஸ்தர் பலி!

திருகோணமலை,நவ.16

திருகோணமலை-மூதூர் பகுதியில் உள்ள இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியான சூடைக்குடாவில் நேற்று முன்தினம் மாலை 5மணியளவில் ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்ததில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் தலை சிதறிப் பலியானார்.

பாலசிங்கம் சுக்ராஜா (வயது28) என்பவரே உயிரிழந்தவராவார்.

வயல் வேலைக்குச் சென்றுவிட்டு உறவினர் வீடு ஒன்றில் இருந்த போது இவர் ஷெல் தாக்குதலுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்பட்டது.

# நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் தினைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

**குறிப்பு:-** இந்நிதிக்குப் பணம் சேகரிப்பதாகக் கூறி சில மோசடியாளர்கள் படிவங்களைத் தயாரித்து பொதுமக்களிடம் நன்கொடை கேட்டுச் செல்வதாக அறிய வந்துள்ளது. இது விடயத்தில் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**14.11.2000 (செவ்வாய்க்கிழமை) வரை கிடைத்த நிதி:-**

| | ரூபா |
|---|---|
| முன்கொண்டுவரப்பட்டது | - 660,209 |
| 01. ஓர் அன்பர் - அடைப்பன் றோட், யாழ். | - 100 |
| 02. இ. விஜயகருணா - நெல்லியோடை, ஆவரங்கால் | - 200 |
| 03. ந. வடிவேல் - அளவெட்டி வடக்கு | - 1,000 |
| 04. திருமதி சத்தியபாமா ஜெகதீஸ்வரன் - வண்ணார்பண்ணை, யாழ். | - 200 |
| 05. வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் - வதிரி கரவெட்டி | - 1,000 |
| 06. சி. சஜீஸ்ணவன் - பண்டடை வீதி, உடுப்பிட்டி | - 250 |
| 07. சி. சுகநிதன் - பண்டடை வீதி, உடுப்பிட்டி | - 250 |
| 08. இளைப்பாறிய உதவிக்கல்விப்பணிப்பாளர், மட்டுவில் முத்துமாரி அம்மன் கோயிலடி, மட்டுவில் | - 500 |
| 09. எஸ். தனேஸ்குமார், கரம்பகம், மிருசுவில் | - 100 |
| 10. ஓர் அன்பர் - சங்கத்தானை, சாவகச்சேரி | - 500 |
| 11. க. இராசரத்தினம் - முதலாம்பண்ணை, கனகபுரம், கிளிநொச்சி | - 500 |
| 12. ஆண்டு 6C மாணவர்கள் யாழ். இந்துக்கல்லூரி | - 150 |
| 13. அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் - யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ. க. த. க. பாடசாலை | -1,883.50 |
| 14. ஓர் அன்பர் மணற்காடு | - 100 |
| மொத்தம்: | 666,942.50 |


# திறப்பு விழா

# விநாயகர் பென்ஸி ஹவுஸ்

**இன்று (16-11-2000) வியாழக்கிழமை**

**சுபநேரம் காலை 7.38 தொடக்கம் 9.08 மணி வரை.**

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**பலாலி வீதி,**
**கோண்டாவில் சந்தி.**

(80542)

உரிமையாளர்
**சி. சிவரூபன்**


உ

# தசாக கிருஹயக்ஞ அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விக்கிரம வருடம் ஐப்பசி மாதம் 23 ஆம் நாள் (08-11-2000) புதன்கிழமை முருகனடி சேர்ந்த

பிரம்மஸ்ரீ சுவாமிநாதக்குருக்கள் சோமாஸ்கந்தசர்மா அவர்களின்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

**ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.**

| | | | |
|---|---|---|---|
| 17-11-2000 | வெள்ளிக்கிழமை | பகல் 10 மணி | - தசாகம் |
| 18-11-2000 | சனிக்கிழமை | பகல் 10 மணி | - ஏகோதிட்டம் + மாசிகம் |
| 19-11-2000 | ஞாயிற்றுக்கிழமை | பகல் 10 மணி | - சபிண்டீகரணம் |
| 20-11-2000 | திங்கட்கிழமை | பகல் 12 மணி | - கிருஹயக்ஞம் |

*மேற்படி கிரியைகளில் பங்குபற்றி முருகனடி சேர்ந்த அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.*

*கந்தசுவாமி தேவஸ்தானம்,*
*நீர்வேலி.*

**சிவஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள்**
**குடும்பத்தினர்.**

(80532)

# கப்பல் கட்டணத்துக்கான ஜி.எஸ்.ரி. வரியை நீக்குக

## ஜனாதிபதியிடம் மீண்டும் கோரிக்கை

அரியாலை,நவ.16

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் கப்பல் மூலம் எடுத்து வரப்படும் பொருள்களுக்கான கப்பல் கட்டணத்துக்கு வரி விலக்கு அளிக்கும் வகையில் ஜி.எஸ்.ரி. வரிச்சட்டத்தில் திருத்தம் கொண்டுவர நடவடிக்கை எடுக்குக.

யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள ஒரு கடிதத்தில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலம் கொண்டு வரப்படும் பொருள்களுக்கான கப்பற் கட்டணத்தின் மீதான ஜி.எஸ்.ரி.இலிருந்து விலக்களிக்குமாறு 03.09.98இல் இருந்து கோரிக்கை விடுத்து வருகின்றோம்.

யாழ்ப்பாண தீபகற்ப மக்களுக்கு தரைமார்க்கமான போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தினால் பொருள்கள் கப்பல் மூலம் கொண்டு வரப்படுகின்றன என்பதைக் குறிப்பிட்டு வருகின்றோம்.

கப்பற் கட்டணத்தை ஜி.எஸ்.ரி.யில் இருந்து விலக்களிப்பதற்கு சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளல் அவசியம் எனத் தெரிவிக்கப்படுகிறது. எனவே, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்குரிய கப்பற் கட்டணத்திற்கு வரி விலக்களிக்கும் வகையில் 1996 ஆம் ஆண்டு 34ஆம் இலக்க ஜி.எஸ்.ரி. சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுதவுமாறு ஜனாதிபதி அவர்களை வேண்டிக் கொள்கின்றோம் - என்றுள்ளது.

டக்ளஸ் தேவானந்தாவுக்கும இக்கடிதத்தின் பிரதி ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ஜ-17)

# சூட்டுச் சத்தம் கேட்ட போது ஐயோ என அலறியபடி வீழ்ந்தார்

## ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் சாட்சியம்

யாழ்ப்பாணம்,நவ.16

துப்பாக்கிச் சூட்டுச்சத்தம் கேட்டு நான் வெளியே வந்தபொழுது காலஞ்சென்றவர் ஐயோ என்று அலறியவாறு கீழே விழுவதைக் கண்டேன்.

யாழ். நகரிலுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர்அணி) அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த சின்னத்தம்பி நவரட்ணராஜா என்பவரின் மரண விசாரணையில் சாட்சியமளித்த அந்த அணியைச் சேர்ந்த வை.விக்கினேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.நீதிவான் இ.த.விக்கினராஜா முன்னிலையில் நடைபெற்ற இந்த விசாரணையில் அவர் மேலும் கூறியதாவது:-

கீழே விழுந்தவரை அருகில் நின்ற தோழர்கள் தாங்கிப் பிடித்தவாறு நின்றனர். அப்பொழுது தனது பிள்ளையும் மனைவியும் புத்தூரில் இருப்பதாகவும் அவர்களிடம் தாம் காயமடைந்தது பற்றித் தெரிவிக்குமாறும் அவர் கூறினார்.

ஏனைய தோழர்களின் உதவியுடன் அவரை வைத்தியசாலைக்கு அனுப்பிவிட்டு, ஆட்டோவில் புத்தூர் சென்று அவரது மனைவியை அழைத்து வந்த பொழுது அவர் இறந்து விட்டதாக எமது அலுவலகத்தில் தெரிவித்தனர்.

பின்னர் இச்சம்பவம் தொடர்பாக 14ஆம் திகதி காலை யாழ்.பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தேன்.

இந்தச் சம்பவத்தை நேரடியாகப் பார்த்தவர்களை அழைத்து வருமாறு பொலீஸார் தெரிவித்தனர்.

எமது அலுவலகத்தைச் சேர்ந்த நாகமுத்து நாகேந்திரம், வசந்தநாதன் சிவநாதன், கதிரவேலு ரவிச்சந்திரன் ஆகியோரை பொலீஸ் நிலையத்திற்குக் கூட்டிச்சென்றேன். பொலீஸ நிலையத்தில் வைத்து இவர்களது வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டன.

காலஞ்சென்றவருக்கும் துப்பாக்கியைச் சுத்திகரித்துக் கொண்டிருந்த நா.நாகேந்திரம் என்பவருக்கும் இடையில் எவ்வித பகைமை உணர்வும் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்படி அவர் சாட்சியத்தில் தெரிவித்தார்.

(ஜ-5-10)

# சைவத் திருமுறை விழா

உடுவில் கல்விக் கோட்டத்தினால் வருடம்தோறும் நடத்தப்பட்டு வரும் சைவத்திருமுறை விழா இவ்வருடமும் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

உடுவில் கல்விக் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் தலைமையில் உடுவில் கோட்ட பாடசாலைகளின அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களால் அன்றையதினம் சைவத்திருமுறை விழாவுடன், ஆறுமுகநாவலர் குரு பூசையும், உடுவில் கல்விக்கோட்டத்தில் நடைபெற்ற திருமுறை மனனப் போட்டி மற்றும் தொண்டுபடு செயல் முறைப் போட்டி என்பவற்றில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு என்பனவும் நடத்தப்பட உள்ளன.

ஞாயிற்றுக்கிழமை காலை சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தானத்தில் நடைபெறும் விசேட பூசைகளைத் தொடர்ந்து சமயகுரவர்களின் திருவுருவப் படங்கள், அவர்கள் அருளிச் செய்த திருமுறைகள் என்பன ஊர்வலமாக சுமந்து ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்குக் கொண்டு வரப்படும்.

கோட்ட மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் முதலிடம் பெற்ற சில நிகழ்ச்சிகளும், இணுவில இந்துக்கல்லூரி மாணவர்களின் "அப்பூதி அடிகள்"நாடகமும் விழாவில இடம்பெறும்

## இந்துஆலயங்களின் மகாசபை அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,நவ.16

"வலி.மேற்கு இந்து ஆலயங்களின் மகாசபை" என்னும் அமைப்பு ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபைக் கட்டடத்தில் நேற்று நடைபெற்ற இந்து ஆலயங்களின் தலைவர்கள் மற்றும் நிர்வாக உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் இந்த அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவரும்,ஈ.பி.டி.பி.யின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளருமான ந.திரிலோகநாதன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

## கல்விமாணி நுழைவுத் தேர்வு

தேசியக் கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படும் கல்விமாணி நுழைவுத் தேர்வு எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை காலை யாழ்.இந்துக் கல்லூரி மற்றும் யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றில் நடைபெறும்.

பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் -

நெடுந்தீவு, எழுவைதீவு மற்றும் நயினாதீவு, அனலைதீவுப் பகுதிகளைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனையில் தமது அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை அறிவித்துள்ளார்.

## சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம்,நவ.16

யாழ்.பல்கலைக் கழக மீன்பிடியியல் டிப்ளோமா மாணவர்களின் 'கடல் ஓசை' சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை காலை 10.00 மணிக்கு விஞ்ஞான பீட உயிரியல்துறை மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ளும் பொருட்டு நாளை காலை மீன்பிடியியல் டிப்ளோமா முதலாம் அணி மாணவர்களை கடல் வள அபிவிருத்தி நிலையத்தில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

(இ-5-6)

## பரிசளிப்பு விழா

சுழிபுரம் வடக்கு ஆறுமுகம் வித்தியாலய பரிசளிப்பு விழா, இன்று வியாழன் பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் ந.பாலச்சந்திரன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக சங்கானை கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையாவும் சிறப்பு விருந்தினராக 'போரூட்' நிறுவன திட்ட இணைப்பாளர் க.குணேந்திரதாசனும் கௌரவ விருந்தினர்களாக சி.பிறைசூடிக்குரு, க.குமாரசாமி ஆகியோரும் கலந்துகொள்வர்.

(ஜ-28)

## எச்.என்.பி. வெற்றிக் கேடய போட்டிகள்

யாழ்ப்பாணம்,நவ.16

ஹற்றன் நஷனல் வங்கி நடத்தும் மிலேனியம் ஆண்டுக்கான எச்.என்.பி. வெற்றிக் கேடயத்துக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி ஆடுகளத்தில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

* பிற்பகல் 3.30 மணிக்கு ஜொலிஸ்ரார் வி.க எதிர் பற்றீஷியன் வி.க.

* பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்.இ.க. அணி எதிர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி.(இ-8)

## கப்பலில் தபாற் பொதிகள்

யாழ்ப்பாணம்,நவ.16

பருத்தித்துறைக்கு நேற்று வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரின் கப்பலில் வெளிநாட்டுத் தபால்கள் அடங்கிய 20 தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 57 தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டதாக யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மோட்டார் சைக்கிள்கள் மோதின

நேருக்கு நேர் வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்க்ள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த இருவர் காயமடைந்தனர். நெல்லியடிச் சந்தியில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்தவர்களான ச.ஸ்ரீபாஸ்கரன்(வயது34), சி.சிவகுமார் (வயது25) ஆகியோர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(இ-7-117)

## யாழ்/திருக்குடும்ப கன்னியர் மடம் தரம் - 6 அனுமதி

மேற்படி வகுப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி :~ 30~11~2000**

(C/13844) **- அதிபர்.**

## இதய அஞ்சலி

யாழ்.மாவட்ட மதுவரித் திணைக்களத்தைச் சேர்ந்த **இ.நேசகுமார் (சோதி)** அவர்களின் தந்தையார் தாவடியைச் சேர்ந்த **திரு. செல்லையா இராசையா** அவர்களின் திடீர் மறைவையொட்டி அவரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*மதுவரித்திணைக்களம்,*
*திக்கம் வடிசாலை,*
*பருத்தித்துறை.* (80589)

**S.மதன்மோகன்,**
**றொகான் சஞ்ஜேராஜு (J.P),**
**N.T. சபாரத்தினம்.**

சாமியே சரணம் ஐயப்பா

## சபரிமலை ஐயப்பசுவாமி மகரஜோதிப் பெருவிழா

சாமி சரணம்

இன்று 16.11.2000 காலை 9 மணிக்கு ஐயப்ப விரத மாலை அணிதலுடன் விரதம் ஆரம்பமாகி (14.01.2001) மகர ஜோதி விழாவை முன்னிட்டு தினமும் மாலை 4 மணி முதல் 6 மணி வரையும் விசேட பூஜைகளும் பஜனைகளும் பிரார்த்தனைகளும் நடைபெறும்.

28.12.2000 முதல் 14.01.2001 வரை 18 நாள்களும் விசேட 18 படி பூஜைகள் இடம்பெறும்.

இப்பெருவிழாவில் அனைத்து ஐயப்ப பக்தர்களையும் கலந்து சிறப்பித்து ஐயப்ப சுவாமியின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*சிவபூதவராயர் கோயிலடி,*
*கோண்டாவில் வடக்கு,*
*கோண்டாவில்.* (80585)

**ஐயப்ப தாசன்**
**இ.ஹரிஹரசுதசர்மா**

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.கிளை தலைமையகம்

**21.05.2000 அன்று நடைபெறவேண்டிய ஒத்திவைக்கப்பட்ட பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகக் கிளைக்குழு உறுப்பினர்கள் தேர்தலும் - 2000**

யாழ்.கிளையின் பிரிவுகள் யாவும் 31.12.2000க்கு முன்னதாக தமது பிரிவுப் பொதுச் சபையினைக் கூட்டி, யாழ்.கிளையின் பொதுக் கூட்டத்திலும், புதிய நிர்வாகக் கிளைக்குழு உறுப்பினர் தேர்தலிலும் பங்கு பற்றுவதற்காகப் பத்து (10) பிரதிநிதிகளையும் ஐந்து (5) பதில் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுத்து அவர்களின் பெயர்களையும், தேசிய அடையாள அட்டை இலக்கங்களையும் 05.01.2001ஆந் திகதிக்கு முன்னதாக கிளைக் காரியாலயத்துக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம். தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களை கிளைக் காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் 15.01.2001 தொடக்கம் 19.01.2001 வரை பெற்றுக் கொள்ளலாம். நியமனப் பத்திரங்களை கிளைக் காரியாலயத்தில் 20.01.2001 மு.பகல் 9.30 - பி.பகல் 4.00 மணிவரை தாக்கல் செய்ய வேண்டும். விரும்பும் வேட்பாளர்கள் கிளைக் காரியாலயத்தில் 23.01.2001 மு.பகல் 9.30 - பிற்பகல் 4.00 மணி வரை வாபஸ் பெற்றுக் கொள்ளலாம். ஆண்டுப் பொதுக் கூட்டமும், தேர்தலும் 28.01.2001 மு.பகல் 10.00 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பமாகும். மேலும் விவரங்களை கிளைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

*73,கண்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/13847)

**செஞ்சிலுவைச் சேவையில் உப செயலாளர்.**

## இதய அஞ்சலி

**ஸ்ரீபாலகிருஷ்ணன்**
(அண்ணாமலை- யா.ப.நோ.கூ.ச. கிளை 4இன் தலைவர்),
**ஸ்ரீபாலசந்திரன்**
(சச்சி - எழுதுநர் யா.ப.நோ.கூ.ச.)
ஆகியோரின் அன்புத் தாயார்

**திருமதி விசாலாட்சி பரராஜசிங்கம்**

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

(80578) **ஓட்டுமடம் கிளை 4இன் செயற்குழுவினர்.**

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை நடராசா

(வாழைப்பழ வர்த்தகர் - திருநெல்வேலிச் சந்தை)

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நடராசா நேற்று (15.11.2000) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்துரை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்வத்துரை - அன்னம்மா தம்பதிகளின் மருமகனும் யோகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஜெயராசன், ரேணுகாதேவி(ஆசிரியர், யா/திருநெல்வேலி முத்துத்தம்பி ம.வி.), நாகேஸ்வரி, நாமகள்தேவி, நிர்மலன், நிர்மலாதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற பாலசிங்கம், இராமுப்பிள்ளை, இரத்தினம்மா, நவரத்தினம், இராசலிங்கம்(மலேசியா), கமலாதேவி ஆகியோரின் சகோதரரும் துரைசிங்கம், சரஸ்வதி, பரமேஸ்வரி, தவமணிதேவி(மலேசியா), பத்மாதேவி, கமலாதேவி, மநுலிங்கம்(நோர்வே), பரம்சோதிலிங்கம், இலங்கதேவி ஆகியோரின் மைத்துனரும் சிவசோதி, ஜெயபாலசிங்கம், ஸ்ரீகாந்தன், கலைச்செல்வி(கனடா) ஆகியோரின் மாமனாரும் சிவாஜினி, சிவசெந்தூரன், சாம்பவி, ஜெசிந்தன், ஜங்கரன், சன்ஜா, சுரேனுயா, நிதர்ஷிஜா, சதுர்ஜன்(கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.11.2000) புதன்கிழமை கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

*நாகபூசணி அம்மன் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (80582)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள், சிவசோதி (மருமகன்).**

# மேல் நீதிமன்றம் அமைக்கக் கோரி ஊர்வலத்துக்கு ஏற்பாடு

வலி.வடக்கு,நவ.16

யாழ்.மாவட்டத்தில் மேல்நீதிமன்றம் அமைக்கக் கோரி தென்பகுதிச் சிறையிலுள்ளவர்களின் பெற்றோர், மனைவிமார்,உறவினர்கள் ஆகியோர் யாழ்நகரில் ஊர்வலம் ஒன்றை நடத்த ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் படையினர் மற்றும்பொலீஸாரால் கைது செய்யப்படுபவர்கள் அனுராதபுரம் மேல் நீதிமன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டே விசாரிக்கப்படுகிறார்கள்.

அங்கு தமிழக்கைதிகளுக்கு எந்த வகையான பாதுகாப்பும் இல்லை. தற்போதைய நாட்டுசசூழ்நிலை காரணமாக குடாநாட்டிலிருந்து அங்கு போக்குவரத்துச் செய்வதும் பெரும் கஷ்டமாக உள்ளது.

கைதானவோரினதும், அவர்களின் உறவினர்களதும் அசௌகரியங்களை நீக்கும் முகமாக யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்றத்தை உடனடியாக அமைக்க வேண்டும் என்று கோரி ஊர்வலம் ஒன்றை நடத்தி அரசின் கவனத்தை ஈர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஊர்வலத்தை அநேகமாக நாளை வெள்ளிக்கிழமை யாழ். நகரில் நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்றம்அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக இவ்வருட ஆரம்பத்தில் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்ட போதிலும் அது இன்னமும் கைவிடப்படவில்லை. (அ-8-86)

# பைக்குள் இருந்த தங்க நகை கேக்குடன் பேக்கரிக்கு!

## பொலீஸாரின் உதவியுடன் மீட்கப்பட்டது.

நெல்லியடி,நவ.16

பேக்கரி ஒன்றுக்கு கொண்டு செல்லப்பட்ட பை ஒன்றிலிருந்து, 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் திருடியதாகக் கூறப்படும் பேக்கரி தொழிலாளர்கள் இருவர் பருத்தித்துறைப் பொலீஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். மீட்கப்பட்ட நகைகள் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வடமராட்சிப் பகுதியிலுள்ள பேக்கரி ஒன்றில் நடைபெற்றது.

இது பற்றித் தெரியவருவதாவது:-

தென்மராட்சிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வடமராட்சியிலுள்ள வராத்துப்பளையில் வசித்து வரும் ஆசிரியை ஒருவர், தனது வீட்டில் தயாரிக்கப்பட்ட கேக்கை வேகவைப்பதற்காகத் தனது பாடசாலைப் பையில் வைத்து பேக்கரிக்கு அனுப்பியதாகவும் -

அப்பையினுள் 9 பவுண் நிறையுள்ள தாலிக்கொடியும், காப்பும் தவறுதலாக ஏற்கனவே வைக்கப்பட்டிருந்ததென்றும் -

பேக்கரிக்கு அனுப்பிய பையினுள் நகையை வைத்ததை உணர்ந்த ஆசிரியை உடனே அந்த பேக்கரிக்குச் சென்று விசாரித்த போது அந்த நகைகளை தாம் எடுக்கவில்லை என்று பேக்கரித் தொழிலாளிகள் தெரிவித்தனர் என்றும் - கூறப்பட்டது.

இது குறித்து அந்த ஆசிரியை பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் முறையிட்டிருந்தார்.

தீவிர விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறைப் பொலீஸார் பேக்கரித் தொழிலாளர் இருவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்து பதுக்கி வைக்கப்பட்டிருந்த தங்க நகைகளை மீட்டு உரியவரிடம் ஒப்படைத்தனர். (இ-15-109-139)


விக்னா
கல்வி நிலையம்
2000 DAY CLASS

இ.நாகரிகம் 7.30
திரு.பத்மராஜா
தமிழ் 8.30
திரு.லிங்கம்
நா. அரங்கியலும் 9.30
திரு.மதி
வரலாறு 10.30
திரு.அஞ்ரன்
புவியியல் 11.30
திரு.ஐங்கரன்
கிறிஸ்தவம் 1.30
திரு.வசந்தன்
அளவையியல்
திரு.சயந்தன்
Sat., sun. 2.00 p.m
ஆரம்பமாகிவிட்டது
வெள்ளி 7.30 (80573)

யங்றோயல்ஸ்
சயன்ஸ் அக்கடமி
நெல்லியடி
2001 DAY CLASS
கலை.வர்த்தக.உயிரியல்.கணித
பிரிவுகள்
ஆரம்பம்:
18-11-2K சனி 9.00
கணக்கியல்
திரு.தவா
பொருளியல்
திரு.விக்கி
(80572)

பிரமிட் & ஒறிஜினல்
வீடியோ CD
வெளியீடுகள்
- அனார்கலி
- இரவும் பகலும்
- நீதிக்குப்பின் பாசம்
- ஒருதலை ராகம்
- மனிதன்
- தர்ம யுத்தம்
- அவன்தான் மனிதன்
- ஜல்லிக்கட்டு
- உரிமைக்குரல்
- உழைத்து வாழவேண்டும்
- மாமன் மகள்
- தாய் மாமன்
- சின்ன மாப்ளே
- உன்னை சொல்லி குற்றமில்லை
- என் தங்கச்சி படிச்சவ
- பெரிய தம்பி
- ஆனந்த்
- வாழ்க்கை
- கைராசிக்காரன்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(C/13851)

BEACON
(வெலிங்டன் சந்தி, யாழ்.)
மீண்டும் ஆரம்பம்!
A/L 2001, 2002
இந்துநாகரிகம்,
இந்துசமயம்
காரை. S.கெங்கா
குறிப்பு:
பிரிவு I நடைபெறுகிறது.
பிரிவு II விரைவில்
ஆரம்பமாகிறது.
நேர அட்டவணையை
அலுவலகத்தில் பெறவும்.
(80515) - நிர்வாகி

சிந்து திரையரங்கு
உரும்பிராய் சந்தி
பிரபு, வையந்தி (அறிமுகம்),
வடிவேல், ராதாரவி
நடித்த
வெண்ணைத்தீவு
பாட்டு
காட்சிகள் 10.30, 3.00(ப.நே.)
(C/13854)


## 2ஆம் நாள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறும் என்று தெரிவிக்கப்பட்ட முதலாம் நாள் விமான சேவையில் பயணம் செய்வோருக்கான பதிவுகள் நேற்று வடமாகாண மீள் குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபையின் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு 88 பேருக்கு நம்பர்த் துண்டுகள் வழங்கப்பட்டன.

இந்த நம்பர்த் துண்டை அவர்கள் யாழ். சிவில் அலுவலகத்தில் இன்று சமர்ப்பித்து பயண அனுமதிப் பத்திரத்தையும் ஹெலி ரூர்ஸ் அலுவலகத்தில் பிரயாணச் சீட்டையும் பெற முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

## யாழ்ப்பாணத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனம் காணப்பட்டதைத் தொடர்ந்து யாழ்.மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட "எய்ட்ஸ்" நோயாளரின் எண்ணிக்கை பதினான்காக உயர்ந்துள்ளது.

இந்த பதினான்கு நோயாளிகளில் பத்துப் பேர் உயிரிழந்து விட்டனர் என்று மருததுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-5-6)

## கொழும்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதே அவரது விஜயத்தின் பிரதான நோக்கம்.

எனினும் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் குறித்த தனது நிலைமைகளை விரிவாகக் கண்டறிவதிலும் அவர் ஈடுபடுவார் என்றும் ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்திப்பது குறித்து அவரது நிகழ்ச்சி அட்டவணையில் சேர்க்கப்படவில்லை ஆயினும் அநேகமாக அவரையும் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்து அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் குறித்து ஆராய்வார்.

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸையும் சந்தித்துப் பேசுவார்.

எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் ஏனைய அரசியல் பிரமுகர்களையும் அவர் சந்தித்துப் பேசுவார். தமிழ்க் கட்சிகளை அநேகமாக 22 ஆம் திகதி சந்தித்துப் பேசுவார்.

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையும் ஜனாதிபதி சந்திரிகாவையும் சந்தித்துச் சென்ற பின்னர் கொழும்புக்கு வரும் முதலாவது வெளிநாட்டு அமைச்சர் பீற்றர் ஹெய்ன் ஆவார்.

பிரிட்டனில் விடுதலைப் புலிகளின் அலுவலகம் இயங்குவதோடு, இலங்கை அரசாங்கம் பல தடவைகள் கேட்டுக்கொண்ட போதிலும் அந்நாடு புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யவில்லை.

இத்தகைய பின்னணியில் பிரிட்டிஷ் அமைச்சரின் விஜயம் ஒரு வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது எனவும் -

கொழும்பு வருவதற்கு முன்னர் அவர் இந்தியாவுக்கு விஜயம் செய்ய இருப்பதால் இந்தியாவுடனும் சமாதான முயற்சிகள் குறித்துப் பேசுவார் எனவும் - அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

அமைச்சர் பீற்றர் ஹெய்ன் இம்மாதம் 18ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்கிறார்.

இவர் கொழும்பில் தங்கியிருக்கும் வேளை "அதிகாரப்பரவலும் வட அயர்லாந்தின் சமாதான முயற்சிகளும் அதனூடான இனவிவகாரங்களுக்கான முன்னுதாரணமும்" என்ற பொருளில் 'பிரிட்டிஷ் கவுன்ஸில்' மண்டபத்தில் இரண்டு மணி நேரம் உரையாற்றுவார்.

1998 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்யும் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் இவரே ஆவார்.

அமைச்சர் பீற்றர் ஹெய்ன் நிறவெறி எதிர்ப்பு ஆதரவாளர் என்பதும் தென்னாபிரிக்காவில் பணியாற்றிய போது நிறவெறி எதிர்ப்புக் கொள்கைக்காக அங்கிருந்து குடும்பத்தோடு வெளியேற்றப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் இப்போது தான் முதல் தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்கிறார். (அ-8-7)

## தேடுதல்

இருபாலை, கல்வியங்காடு, நல்லூர் ஆகிய பகுதிகள் நேற்றுக் காலை முதல் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. தேடுதலின் போது இப்பகுதிகளைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள், மாணவர்கள் ஆகியோர் மட்டுமே வெறியேற அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நடவடிக்கையின் போது பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பஸ்கள் கட்டப்பிராயில் வைத்து திருப்பப்பட்டன. அவை இருபாலை - கோண்டாவில் ஊடாகவே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

## காங்கிரஸ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயினும் அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற சோனியா காந்தி கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இவர் 7 ஆயிரத்து 448 வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஜிதேந்திர பிரசாதா 94 வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளார். (இ-10)

## நோர்வேயின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் - இலங்கை அரசு ஆகிய இரண்டு தரப்பினரும் கேட்டுக் கொண்டால் அதனைச் செய்வதற்கு எப்போதும் தயாராக உள்ளோம்.

யுத்தத்தை நிறுத்தி சமாதானமான சூழ்நிலையில் அரசியல் பேச்சுவார்த்தையை நடத்தி ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களின் சகல எதிர்பார்ப்புக்களையும் அக்கறைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய நீண்டகாலத் தீர்வைக் காணுமாறு பிரிட்டன் இரண்டு தரப்புக்களையும் கேட்டு வருகிறது -

இலங்கையில் நிலவும் இனநெருக்கடியை நான் நன்கு அறிவேன். பிரிட்டனிலும் எனது இளம் பராயத்தைக் கழித்த தென்னாபிரிக்காவிலும் நான் கண்ட அனுபவத்தின் பிரகாரம், இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வே ஒரே வழி; வன்செயல்கள் அல்ல என்பதே எனது நம்பிக்கையாகும்.வட அயர்லாந்தில் எமக்கு ஏற்பட்ட சொந்த அனுபவம், இலங்கைக்கு முக்கிய பாடங்களைக் கொண்டுள்ளது - என்று தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் பிரிட்டனில் தமது அலுவலகங்களை அமைத்துச் செயற்படுவதையும், அங்குள்ள தமது ஆதரவாளர்களிடமிருந்து நிதி திரட்டுவதையும் தடுக்கும் நோக்கத்துடன் அதனைத் தடை செய்யுமாறு இலங்கை அரசாங்கம் அடிக்கடி பிரிட்டனிடம் கேட்டு வருகிறது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மிக அண்மையில் பிரிட்டனுக்குச் சென்றிருந்த போதும் விடுதலைப் புலிகளைத் தடை செய்யுமாறு கேட்டிருந்தார்.

இத்தகைய ஒரு பின்னணியில், பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் நோர்வே அரசின் சமாதான முயற்சிகளுக்குப் பக்கத் துணையாக உதவுமாறு இரண்டு தரப்புக்களும் கேட்டுக்கொண்டால் அதற்குத் தாம் தயார் என்று கூறியிருப்பது விடுதலைப் புலிகளைத் தடைசெய்யும் எண்ணம் பிரிட்டனுக்கு இல்லை என்பதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுவதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தான் தடைசெய்ய உத்தேசித்திருக்கும் அல்லது எண்ணம் கொண்டிருக்கும் இயக்கம் ஒன்று தன்னிடம் உதவி கேட்கவேண்டும் என்று எந்த அரசாங்கமோ அமைச்சரோ கருத்துக் கூறமாட்டார் என்று அவதானிகள் மேலும் சுட்டிக்காட்டினர். (அ-8)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.16

சுழிபுரம் வடக்கு ஆறுமுகம் வித்தியாசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-7)

## பல்கலைக்கழக.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் கலைப்பிரிவு மூன்றாம் வருட மாணவர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாகவே நேற்றைய மோதல் இடம் பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

இந்த மோதலைத் தடுப்பதற்கு முயற்சித்த மாணவர் ஒருவரும் தாக்கப்பட்டார். அதனால் மோதலில் ஈடுபட்ட மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கைகலப்பாக மாறியது.

சிரேஷ்ட விரிவுரையாளர்களும் மாணவ உதவி ஆலோசகர்களும் மைதானத்துக்கு விரைந்து மிகச் சிரமப்பட்டே கைகலப்பை நிறுதினர்.

இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட மாணவர்கள் அனைவரும் பல்கலைக்கழக மாணவ ஆலோசகரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (அ-5-6)

## கன்னட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீரப்பன் சில நிபந்தனைகளை முன் வைத்திருந்தான்.

வீரப்பனின் கோரிக்கைகளுக்கு அரசு இணங்கிய போதும் வீரப்பனின் சகாக்களான 115தடாக் கைதிகளை விடுவிக்க புதுடில்லி உச்ச நீதிமன்றம் அனுமதி மறுத்தது.

கடைசியாக தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் அரசு தூதுவராகச் சென்றிருந்தார்.

தற்போது எந்த நிபந்தனையும் வீரப்பனால் கோரப்படாத நிலையில் ராஜ்குமார் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ராஜ்குமார் விடுவிக்கப்பட்டு ஈரோடு சென்று தற்போது பெங்களூர் போய்ச் சேர்ந்துள்ளார்.

ராஜ்குமாருடன் தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி கன்னட முதல்மைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா ஆகியோர் தொலைபேசி மூலம் உரையாடினர்.

இவரது விடுதலையை அடுத்து பெங்களூர் நகரமெங்கும் உற்சாகத்தில் மூழ்கியுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன. பட்டாசுகள் கொளுத்தியும் இனிப்புகள் வழங்கியும் மக்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். ஆலயங்களில் சிறப்புப் பூஜைகள் நடைபெற்றன.(இ-ஒ-8-10)

## விமானப்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

9 வயதுக்கும் அதற்கு மேற்பட்டோருக்கும் முழுக் கட்டணமும் மூன்று வயது முதல் எட்டு வயது வரையானோருக்கு அரைக் கட்டணமும் அறவிடப்படும் என்றும் அதற்குக் குறைவானோருக்கு கட்டணம் அறவிடப்பட மாட்டாது என்றும் சிவில் நிர்வாக அதிகாரி தெரிவித்தார்.

விமானப் பயணிகள் யாழ். சிங்கள மகா வித்தியாலயத்தில் வைத்தே பலாலிக்கு பஸ்களில் ஏற்றிச் செல்லப்படுவர். விமானப் படையினர் இந்த பஸ்களுக்கு பாதுகாப்பு வழங்குவர்.

விமானப் பயணி ஒருவர் 15 கிலோ எடையுள்ள பொதிகளை மட்டும் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவார்.

தடை செய்யப்பட்ட பொருள்களை எடுத்துச் செல்வதாக இருந்தால் விசேட அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும். தினமும் இரு சேவைகள் இடம்பெறும். ஒரு சேவையில் 48 பேர் பயணம் செய்ய முடியும். (இ-5)


சுன்னாகம் றோட்டரக்ட் கழகம்
ROTARACT CLUB
இணுவில் புதிய கஜீபன நகை மாடத்தின்
ஆதரவில்
சுன்னாகம் தெற்கு இந்து இளைஞர் மன்றத்துடன்
இணைந்து நடத்தும்
க.பொ.த. (சா/த) பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு
இடம்: யா/யூனியன் கல்லூரி மண்டபம்

19.11.2000 - ஞாயிறு
காலை 8.30 - தமிழ் மொழி - திரு.ஏ.ஆர்த்திகன்
பி.ப. 1.00 - ஆங்கிலம் - திரு.எஸ்.சந்திரமௌலி
25.11.2000 - சனி
காலை 8.30 - கணிதம் - திரு.எஸ்.மகேந்திரன்
பி.ப. 1.00 - சமூகக்கல்வி - திரு.ஆர்.மகேஸ்
26.11.2000 - ஞாயிறு
காலை 8.30 - விஞ்ஞானம் - திரு.இரா.செல்வவடிவேல்
பி.ப. 1.00 - வர்த்தகம் - திரு.ரி.வாமதேவன்
(80576) - சுன்னாகம் றோட்டரக்ட் கழகம்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 36ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.11.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.